# பம்பாயில இரண்டாயிரத்துக்கு அதிகமானோர் கைதுசெய்யப்பட்டனர்

Registered as a News paper in Ceylon

விலை சதம் 15

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ்: 2

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் மாசி 1 ஜுல்க: 24 புதன்கிழமை [12-2-69]

## மாண்டவர் தொகை 37

பம்பாய், பெப். 11
பம்பாயில் நடைபெற்று வரும் கலகத்தில் இதுவரை 37 பேர் மாண்டுள்ளனர். 500 பேர காயமுற்றனர். இதுசம்பந்தமாக இரண்டாயிரத்துக்கு மேலானோர் கைதாகியுள்ளனர்.

இக்கலவரங்கள் காரணமாக 21 ஆலைகள் மூடப்பட்டுள்ளன. பல இடங்களில் தீ வைப்பு சம்பவங்களும் அசம்பாவிதங்களும் சூறையாடுதல் சம்பவங் களும் நடைபெற்றுள்ளன. இதனையொட்டி பலத்த பொலிஸ் பந்தோபஸ்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிவசேனை ஆதரவாளர்களின் சுரண்டுதலால் நடைபெற்றுவரும் இக்கலவரத்தில் பொலிசாருக்கும் மக்களுக்குமிடையே நடைபெற்ற மோதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட போதே 37 பேர் மாண்டதாகவும் 150க்கு மேற்பட்டோருக்கு தோட்டாக் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. 300க்கு மேற்பட்டோர் கற்களால் காயமுற்றனர்.

(3ம் பக்கமும் பார்க்க)

## துரையப்பாபணத்தை கையாடவில்லை

### மாநகரசபையில் தெய்வேந்திரம்

யாழ்ப்பாணம், புதன்
'முன்னாள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா இந்தச் சபையின்பணத்தை ஒரு போதும் களவாடவில்லை. கௌரவ அங்கத்தவர் ஒருவர் தனது பேச்சின்போது துரையப்பாவின் தற்போதைய நிலை மிகவும் பரிதாபகரமாக இருப்பதாகக் கூறியது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.'

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மாநகரசபையின் விசேஷ கூட்டத்தில் திரு. கே. வி. தெய்வேந்திரம் இவ்வாறு தெரிவித்தார்.

சுண்டுக்குளி வட்டார அங்கத்தவரான திரு. என். அந்தோனிப்பிள்ளை பேசும்போது, அல்பிரட்துரையப்பாவின் நிலை பரிதாபகரமாக இருப்பதாகக் குறிப்பிட்டதைக்கண்டித்து திரு. தெய்வேந்திரம் பேசுகையில் தெரிவித்ததாவது:. திரு. துரையப்பா இல்லாத இந்தச்சபையில் அவரைக்குறை கூறியது சரியில்லாததாகும். துரையப்பா கள்வனில்லை; சபையின் பணத்தைக்கையாடவுமில்லை. நகரம் துர்நாற்றம் எடுப்பதைப் பொறுக்காமல் சபையின் அனுமதியுடன்தான் இரண்டுலொறிகள் வாங்கினுர். அரசாங்கத்தின் அனுமதியின்றி வாங்கியதற்காக அவர்மீது 'சேர்சாஜ்' விதிக்கப்பட்டது.

பல மேயர்கள்மீது 'சேர்சாஜ்' வந்துள்ளது; இன்னும் வரும். இதற்குப் பயந்து மேயர்கள் தங்கள் கடமையைச் செய்யாமல்இருக்க முடியாது. மக்கள் தேவைகளை நிறைவேற்ற எதற்கும் பயப்படக்கூடாது.

திரு. அ. விசுவநாதன், திரு. தெய்வேந்தரம் பேசியதை ஆதரித்துப்பேசினுர். (கா. நி)

# 'பல்கலைக்கழக சம்பவத்தில் பாரபட்சமற்றகமிஷன்தேவை'

## அரசாங்க எதிர்க்கட்சி செனட்டர்கள் கோரிக்கை

கொழும்பு, செவ்.
பேராதனைப் பல்கலைக்கழக வளவுக்குள்சுதந்திரதினத்துக்கு முதல்நாள் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கும் ராணுவத்தினருக்குமிடையில் நடந்த கைகலப்புச் சம்பவங்கள் சம்பந்தமாக சுதந்திரமான விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கும்படி இன்று செனட்டில் அரசாங்க-எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் வற்புறுத்தினர்கள்.

ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த செனட்டர் திரு. ஸ்டான்லி கல்கபே பேசுகையில், பல்கலைக்கழக வளவுக்குள் நடந்த சம்பவம் சம்பந்தமாகப் பிரதமருக்குத் தவறான தகவல்களை யாரோ கொடுத்து விட்டார்களென்றும், அதனாலேயே பிரதமர் ராணுவத்தினருக்கு ஆதரவாக ஆட்சிமன்றத்தில் அறிக்கை விட்டாரென்றும், குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகம் சம்பந்தமாக முழு விபரங்களும்பிரதமருக்குத் தெரிவிக்கப்படவில்லை. அவருக்கு உண்மை விபரம் தெரியாததாலேயே பிரதமர் இப்படி அறிக்கை விட்டாரென்றும் குறிப்பிட்டு மென்றும் வற்புறுத்தினுர்.

மற்றும்பல எதிர்க்கட்சி அரசாங்கக்கட்சி செனட்டர்கள் சுதந்திரமான விசாரணை கமிஷன் ஒன்று நியமிக்க வேண்டுமென்றும்கோரினர்.

### பல்கலைக்கழக கமிட்டி நியமித்த கமிஷன்

பல்கலைக்கழக கமிட்டி இது சம்பந்தமாக விசாரணை நடத்த திரு சி. எக்ஸ். மார்டின் தலைமையிலமைந்த மூவர் கமிஷனை நியமித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கோவில்களுக்கு இலவச மின்சாரம் கிடைக்கும்

### மாநகரசபை ஏற்பாடு


யாழ்ப்பாணம், புதன்
யாழ்பாண நகர எல்லைக்குள்ளிருக்கும் சகல கோவில்களின் திருவிழாக்காலங்களில் வெளி வீதிகளுக்கும் யாழ்ப்பாண மாநகரசபையினர் இலவசமாக வெளிச்சம் கொடுக்க முன்வந்துள்ளார்கள்.

யாழ்ப்பாண மாநகரசபையின் நிதிக்குழு தனது முதலாவது கூட்டத்தில் இந்த சிபார்சைசெய்துள்ளது.

திருவிழா நாட்களில் கோவில்களுக்கும், தேவாலயங்களுக்கும் வெளிவீதிக்கும் இலவசமாக வெளிச்சவசதி கொடுக்கவேண்டும் என இங்கு தெரிவிக்கப்பட்ட ஆலோசனை ஏகமனதாக ஏற்கப்பட்டதோடு, இது சிபார்சு செய்வதற்கும் அங்கீகரிக்கப்பட்டது.

நூல்நிலையத்தில் மின் வெளிச்சம் ஏற்படுத்துவது குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கை ஏற்கனவே உள்ள விகிதப்படியே வாடகைக்கு விடுவதென்றும், விளையாட்டரங்கு பாவனைக்கு இல்லாதிருக்கும் நாட்களில் இதனை இலவசமாகப் பாவிக்கப் பொலிசாருக்கு வழங்குவதெனவும் முடிவுசெய்யப்பட்டது. (கா. நி.)



விசேஷ செய்திகள் வெளிவரும் நாட்களில் 'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயத்தின் முன்னால் இப்படித்தான் 'ஈழநாடு' பத்திரிகை எப்படியாவது பெற்றுக்கொள்வதற்கு மக்கள் திரள்வார்கள். சமீபத்தில் விசேஷ செய்திகளுடன் வெளியான 'ஈழநாடு' பத்திரிகையைப் பெறுவதற்கு ஆர்வம்மிக்கமக்கள்இப்படி திரண்டார்கள்.

## அண்ணுவுக்கு அஞ்சலி

கைதடி, செவ்.
அண்ணுவுக்கு அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்த கைதடி எம். ஜி. ஆர். மறுமலர்ச்சி மன்றத்தினர் வியாழக்கிழமை மாலை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர். அண்ணுவின் உருவப்படம் தாங்கிய ஊர்வலம் 4 மணிக்கு கைதடி எருதிடல் 'நவ' சனசமூக நிலையத்திலிருந்து ஆரம்பமாகிக் கூட்டமைதானத்தை வந்தடையும்.

வடபகுதி அஸைஸ் விசாரணை

## இனம் தெரியாத

யங்களுக்கும் வெளிவீதிக்கும் இலவசமாக வெளிச்ச வசதி கொடுக்கவேண்டும் என இங்கு தெரிவிக்கப்

இலவசமாகப் பாவிக்கப் பொலிசாருக்கு வழங்குவதெனவும் முடிவுசெய்யப்பட்டது. (கா. நி.)

டில் அரசாங்க-எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் வற்புறுத்தினர்கள்.

வடபகுதி அசைஸ் விசாரணை

# "எதிரிக்கும் இறந்தவருக்கும் எவ்வித கோபதாபமுமில்லை"

## நாவலர் சந்தி படு கொலை வழக்கு;

## எதிரிகள் காரைப் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், புதன்

'எனக்குத் தெரிந்தவரை எதிரியான இரத்தினத்திற்கும் கொலையுண்ட தெய்வேந்திரனுக்கும் எவ்வித கோபதாபமுமில்லை. வெடிச் சத்தம் கேட்டும் நான் எழுந்தேன். தெய்வேந்திரன் முன்பாக சரிந்து கொண்டு போனார். நான் தெய்வேந்திரன் என்று கூப்பிட்டுப் பார்த்தேன். அதன் பின் பொலிஸார் வந்தார்கள்.

நாவலர் சந்தி படுகொலை வழக்கில் சாட்சியமளித்த கந்தையா குலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு இரண்டாவது தினமாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில், நீதியரசர் ஓ. எல். டி. கிறெஸ்டர் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 68-ம்ஆண்டு நவம்பர் 8-ம் தேதி காங்கேசன்துறை வீதியில் சுப்பிரமணியம் தெய்வேந்திரன் (18 வயது) என்ற வாலிபரை சுட்டுக்கொலை செய்ததாக சீனு இரத்தினம் என்பவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் ஜி. ஈ. சிற்றி கியூ. சி., அட்வகேட் ஜி. ஈ. சிற்றி (ஜூனியர்) அட்வகேட் எம். தேவ சகாயம் ஆகியோரின் உதவியுடன், புறக்டர் ரி. வேலுப்பிள்ளை, புறக்டர் எஸ். யோகேஸ்வரன்ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அட்வகேட் என். சிவகுமார் எதிரிக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்ஜித் குணதிலாகா ஆஜரானார். விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். ஜூரிசபையினர் நேற்று காரைப் பார்வையிட்டனர்.

எதிரியின் சார்பில் ஆஜரான அட்வகேட் ஜி. ஈ. சிற்றி, சாட்சியமளித்த குலசிங்கத்தைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: உமது மச்சான் இராசையா இளம்வயதானவரா?-38 வயது.

வழ: உமக்கு அந்த நேரம் வயதென்ன?-27.

வழ: மச்சான் எத்தனை வயதில் திருமணம் செய்தார்?-தெரியாது.

வழ: 14 வயதில் திருமணம் செய்தாரா?- தெரியாது.

வழ: உமது சகோதரிக்கு எத்தனை வயது?- ஞாபகமில்லை.

வழ: உமக்கு எத்தனை வயது?-28அல்லது 30 இருக்கும். என்னிடம் சாதகம் இல்லை.

வழ: மாஜிஸ்திரேட் கோர்ட்டில் 25 வயது என்றீரா?- ஞாபகமில்லை.

வழ: உமக்கு இப்பொழுது 33 வயதிருக்கும்?- இருக்கலாம்.

வழ: பிறப்புச்சாட்சிப் பத்திரம் இருக்கிறதா?- இல்லை.

வழ: உமது சகோதரி மூத்தவரா?- ஆம்.

வழ: ராஜலட்சுமியுடன் மச்சான் கூடுவது கூடாது என நினைத்தீர்?- ஆம்.

வழ: ராஜலட்சுமி அழகானவரா?- சாதாரணமான அழகுள்ள பெண்.

வழ: அவர் சின்னமேளக் காரியா?- ஆம்.

நீதியரசர்: அண்ணன் ராஜலட்சுமியுடன் தொடர்பாக இருந்தபோது நீர் புத்திமதி கூறவில்லை?- இல்லை.

நீதி: ஏன் புத்திமதி சொல்லவில்லை?-நான் சொல்லவில்லை?- நான் சொல்லவில்லை.

வழ: மச்சான் விஷயத்திலும், இதைப்பற்றி அவருடன் கதைத்தீரா?-இல்லை.

வழ: உமது புத்திமதிப்படி மச்சான் நடக்கமாட்டார் என நினைத்தீரா?- வெறிபோட்டால் தன் புத்திப்படி நடப்பார்.

வழ: மது அருந்தினால்தான், நினைத்தபடி நடப்பார்? ஆம்.

வழ: மது அருந்தாதபோது நல்ல மாதிரி நடப்பார்? ஆம்.

வழ: குடிக்காமல்இருக்கும்போது ஏன்புத்திமதிசொல்லவில்லை? குடும்பக் கரைச்சல் வருமென்று சொல்லவில்லை.

வழ: எதிரிக்கும் உமக்கும் முன்பு மனஸ்தாபம் இருந்ததா? இல்லை.

வழ: ராஜலட்சுமியுடன், உமது மச்சான் தொடர்பு பற்றி நீர் மச்சானிடம் சொன்னபோதுஅவர் என்ன சொன்னார்? இதில் தலையிட்டால் தேவையில்லாத கரைச்சல் வரும் என்று கூறினார்.

வழ: எதிரி கலியாணம் செய்தவரா? ஆம்.

வழ: எத்தனை பிள்ளைகள்? தெரியாது.

வழ: தெய்வேந்திரன் உமது நண்பரா? ஆம்.

வழ: நெருங்கிய கூட்டாளியா? ஆம்.

வழ: கடைக்கு ஏன் போனீர்? கடைச்சொந்தக்காரர் என் நண்பர்.

நீதி: சம்பவம் நடக்குமுன் எதிரி உமக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தாரா? ஆம்.

நீதி: வேறு விஷயமாக முறைப்பாடு செய்திருந்தார்? ஆம்.

இரத்தினம் அபூர்வசிங்கம், நாகரத்தினம் விஜயரத்தினம், கடை மனேஜர் சர்மா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

(விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது).

# துணைப் பிரதமர் தேசாய் அண்ணா இல்லம் சென்றார்

சென்னை, பெப். 11

இந்தியத் துணைப் பிரதமர் திரு. மொராஜிதேசாய் நேற்று நுங்கம்பாக்கத்திலுள்ள அமரர் அண்ணாதுரை இல்லத்துக்குச் சென்று திருமதி ராணி அண்ணாதுரையைச் சந்தித்து துக்கம் விசாரித்து தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தார். திருமதி ராணி அண்ணாதுரை அப்போது கண்கலங்கினார். திரு. தேசாய் ஆறுதல் சொன்னார்.

சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் துணைப்பிரதமர் திரு. தேசாய உரை நிகழ்த்தினார்.

''இந்தியாவில் மொழிப் பிரச்னை ஆயிரம் ஆண்டு காலமாக இருந்து வருகிறது. சுதந்திரம் கிடைத்த பிறகு இந்த மொழிப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் 10 ஆண்டுகளில் மொழிப்பிரச்னை பாரதத்தைவிட்டு முற்றாக அகன்றுவிடும் என்று திரு. மொரார்ஜிதேசாய் குறிப்பிட்டார்.

மாக முழு விபரங்களும்பிரதமருக்குத் தெரிவிக்கப்படவில்லை. அவருக்கு உண்மை விபரம் தெரியாததாலேயே பிரதமர் இப்படி அறிக்கை விட்டாரென்று குறிப்பிட்டார். விசாரணைக் கமிஷன் ஒன்று இதுபற்றி ஆராயநியமிக்கப்பட வேண்டுமெனவும் திரு. கல்கபே வற்புறுத்தினார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. ரெஜிபெரேரா இராணுவத்தினர் பல்கலைக்கழக வளவுக்குள் நடந்துகொண்ட விதம் குறித்து பலத்த கண்டனம் தெரிவித்தார். மாணவர்களுடைய பாடக் குறிப்புகளை நாசமாக்கியுள்ளனர், இராணுவத்தினர். இது மிகவும் மோசமான செயல் என்று திரு. ரெஜி வர்ணித்தார்.

சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. டொரிக்டீகுரா பேசுகையில் பிரதமர் கட்டாயப்படுத்தப்பட்டு இராணுவத்துக்கு ஆதரவாக அறிக்கை விடப்பட்டுள்ளாரென்றும், அது சம்பந்தமான பூரண விசாரணையை நடத்துவதற்கு ஒரு சுதந்திரமான விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டு

த்த திரு சி.எக்ஸ்.மார்டின் தலைமையிலமைந்த மூவர் கமிஷனை நியமித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இனம் தெரியாத சடலம்

யாழ்ப்பாணம், புதன்

இனம் தெரியாத ஆணின் சடலம் ஒன்று நேற்றுக்காலை கன்னாதிட்டிச் சந்தியிலுள்ள மண்டபத்தில் கிடந்தது. சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (கா. நி.)

## வீதி செப்பனிட ரூபா 5 ஆயிரம்

குடும்பசிட்டி, செவ்.

ஏழாலை தென் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அழைப்பின் பேரில் ஏழாலை கோவில் வீதியைப் பார்வையிட்ட யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம், சபாரத்தினம் வீதி செப்பனிட ரூபா 5 ஆயிரம்நன்கொடை வழங்கியுள்ளார்.

# விவசாயிகளையும் கலந்தே திட்டங்கள்செயல்படுத்தபடும்

## சி பி டி. கூறுகிறார்

பெறுவளை, செவ்வாய்

அரசாங்கம் விவசாய அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொழுது இனிமேல் விவசாயிகளையும் கலந்தாலோசித்தே செய்வது எனத் தீர்மானித்துள்ளது என்று விவசாய நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி.பி.டி. சில்வா அலகாக மகாவித்தியாலயத்தில்நடைபெற்ற விவசாயிகளின் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

ஒவ்வொரு பகுதிக்கும் மேற்கொள்ளப்படவிருக்கும் விவசாயத் திட்டங்கள் செயல்படுத்தப்படமுன் அவ்விடங்களில் உள்ள விவசாயிகளோடு அதனால் ஏற்படும் கஷ்டங்கள் பிரச்னைகள் ஆகியன ஆராயப்பட்டபின்னர் செயல்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார். வெகுவிரைவில் நாடு சுயதேவையைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவும் எனவும் அப்பகுதி மக்களின் விவசாய முன்னேற்றத்தை யிட்டுத்தான் மகிழ்ச்சியடைவதாகவும், அப்பகுதி நீர்ப்பாசன கால்வாய்களை வெகுவிரைவில் சீர்செய்து தருவதாகவும் தொடர்ந்து பேசிய திரு. சில்வா கூறினார். செனட்டர் ஜினதாச நியதபால பேசுகையில் அரசாங்கத்தின்விவசாயக் கொள்கை வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கவுதவுமெனத் தெரிவித்தார்.

படியாவது பெற்றுக்கொள்வதற்கு மக்கள் திரள்வார்கள். சமீபத்தில் விசேஷ செய்திகளுடன் வெளியான 'ஈழநாடு' பத்திரிகையைப் பெறுவதற்கு ஆர்வம்மிக்கமக்கள்இப்படி திரண்டார்கள்.

'நவ' சனசமூக நிலையத்திலிருந்து ஆரம்பமாகிக் கூட்டமைதானத்தை வந்தடையும்.

# "வடபகுதியில் பட்டதாரி ஆசிரியர்களை குறைப்பதுதான் இரியகொலையின் திட்டம்"

## பட்டதாரிகள் மத்தியில் ஜி. ஜி.

யாழ்ப்பாணம், செவ்

''56-ம் ஆண்டுக்குப் பின் இலங்கையில், எந்த இலாகாவிலும் திறமைசாலிகள் தெரிவுசெய்யப் படவில்லை. வெள்ளைக்காரரைப் பற்றி என்ன சொன்னாலும் அவர்கள்பரீட்சைவைத்து திறமைசாலிகளையே தெரிவுசெய்தார்கள். அதனால்தான் அரசாங்க நிர்வாகம் சீராக நடந்துவந்தது. பிழையான வழிகளில் தற்போது நியமனங்கள் நடைபெற்றுவருகிறது. இதனை நான் பாராளுமன்றக்குழுக்கூட்டத்திலும், பாராளுமன்றத்திலும் பல தடவை எதிர்த்தும், பலன் கிடைக்கவில்லை.''

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடந்த அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்க கூட்டத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

சர்வகலாசாலைக்கு மாணவர்களை அனுப்பு முன்னர் எந்தெந்த இலாகாக்களில், உத்தியோகம் இருக்கிறதென்பதை பதவிவகித்த அரசாங்கங்கள் கணக்கு எடுத்திருக்கவேண்டும். பட்டம் பெறுவதற்காக, பௌத்தம், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களைக் கொண்டு பட்டம் பெற்று என்ன வேலை செய்யமுடியும் என்பதை அரசாங்கம் கவனிக்கவில்லை. இந்து சமயத்தை ஒவ்வொரு சைவ மாணவரும் படிக்கவேண்டும். ஆனால் உத்தியோகம் எடுப்பதற்காக இந்துசமயத்தை ஒரு பாடமாக படிக்கக்கூடாது. அதன்மூலம் வேலைபெறமுடியாது. பத்தாயிரம் பேரில் ஒருவருக்குத்தான், இந்துசமயம்படித்தால், வேலை கிடைக்கும். தமிழர்பண்பாடு சமயத்தை விரும்பிப்படிக்கலாம். ஆனால் வேலைக்காகப் படிக்கக் கூடாது.

சிலநாடுகளில் 15பேருக்கு ஒரு டாக்டர்கள் இருக்கிறார்கள். [50 பேர்களுக்கு ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. நாட்டின் செல்வத்தைப் பொறுத்தே இது இருக்கிறது. டென்மார்க், சுவீடன், ஸ்கண்டினேவியா, நோர்வே போன்ற நாடுகளில்சுகாதார வசதிகூட இருக்கிறது. ஏனெனில் அங்கு பொருளாதார நிலை கூடிய அளவில் இருக்கிறது.

56-ம் ஆண்டுக்குமுன்பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைத்தது. கலுகல்லை கல்விமந்திரியாகவந்த பின் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இரியகொல்லைவந்தபின் நிலைமை மேலும் மோசமானது. கடந்த 10 வருடகாலமாக ஆசிரியர்களாக பட்டதாரிகள், குறைவாகவே நியமனம் பெற்றனர். கல்விமந்திரிகள் பட்டதாரிகளாக இல்லாத காரணமோ தெரியவில்லை.

மாணவ ஆசிரியர் நியமனத்தில் பட்டதாரிகளுக்கு இடம் கொடுக்கும்படிகல்வி மந்திரியிடம் சொன்னேன். ஆனால் ஜி. சி. ஈ. படித்தவர்கள்தான் கூடுதலாக எடுக்கப்பட்டனர். பட்டதாரிகள் மிகமிகக்குறைவு.

இதற்கு என்ன மருந்து இருக்கிறதென்பதை நாம் ஆராயவேண்டும். வட்மாகாணத்தில் ஒரு காலத்தில் பிற இனத்தவர்கள் குடியேறுவதற்கு முன்னர் நாம் நமது நிலத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். வேலை கிடைக்கும்வரை பட்டதாரிகள் தற்காலிகமாகவாவது, அரசாங்கத்திடம் நிலங்கள் பெற்று குடியேறவேண்டும். அரசாங்கம், டிராக்டர் மற்றும் பண உதவிவழங்கவேண்டும். இது உங்களுக்குவிருப்பமானால் நான் முயற்சிசெய்கிறேன்.

இந்தியாவில் ஆங்கிலம்

(4- ம்பக்கம்பார்க்க)

# தையல்கார பெண்களுக்கு மீண்டும் வேலை கிடைத்தது

## சிங்களநிபந்தனையால் வேலை இழந்தவர்கள்

யாழ்ப்பாணம், புதன்

சிங்களச் சட்டத்தால் வேலையிழந்த இரண்டு பெண் ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டது.

சிங்களப் பரீட்சைக்குத் தோற்றவில்லையெனக் காரணம் காட்டி, வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த தையல் பெண்களான இருவருக்குமே மீண்டும் வேலை வழங்கப்பட்டது.

திருமதி குமாரசாமி, சரோஜினி என்ற இந்த இருவருமே சென்ற மாதம் வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்கள்.

இதன்பின்னர் இவர்கள் தங்கள் வேலைநீக்கம் பற்றி பொதுச் சேவைக் கமிஷனுக்கு ஆட்சேபித்து எழுதியதைத் தொடர்ந்தே இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டது. (கா. நி.)

# அமைச்சர் தஹ இப்போது விலகமாட்டாராம்

கொழும்பு, செவ்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவினால் அமைச்சரவையிலிருந்து ராஜினமா செய்யுமாறு வற்புறுத்தப்பட்ட அமைச்சர் இப்போது ராஜினமாச்செய்யப்போவதில்லையென தெரிவித்துள்ளாராம்.

சுங்கப்பகுதியினர் நடத்திவரும் விசாரணை முடிந்த பின்னரே தாம் எதுபற்றியும் முடிவுசெய்ய முடியுமென குறிப்பிட்ட அமைச்சர் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. சம்பந்தப்பட்ட அமைச்சரின் இனத்தவர்கள் சட்டவிரோதமாக சில பொருள்களை வெளியூர்களிலிருந்து கொண்டுவர முயற்சித்ததைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் காரணமாக அமைச்சரை ராஜினமா செய்யுமாறு பிரதமர் வற்புறுத்தியிருந்தது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்


## விற்பனைக்கு

ஒஸ்ரின் A/40 சி. எல் 5595. பொடி திருத்தி, பெயின்ற் அடிக்கப்பட்டது. என்ஜின் இப்போது திருத்தப்பட்டு புதிய பிஸ்ரல் பொருத்தப்பட்டு நல்ல நிலையிலுள்ளது. யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலுள்ள வின்ஸ்லோஸ் கராஜில் காலை 8-30 லிருந்து மாலை 5 மணிவரை பார்வையிடலாம். 636

## குத்தகைக்கு

எலக்றிக் வெல்டிங் பிளான்ட் சகல வசதிகளுடனும், யாழ். நகர எல்லைக்குள் பிரபலியமான வீதியில் இடவசதியும், சகல இதர ஆயுத உபகரண வசதியுடனும் குத்தகைக்கோ அல்லது கொமிஷனுக்கோ இருக்கிறது. விபரங்களுக்கு விளம்பர இலக்கம் 657, மே பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலப் விண்ணப்பிக்கவும். 657


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 12 - 2 - 69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு — செல்வம் நாராயணசாமி, 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 தாளவாத்தியக்கச்சேரி, 10-00 நேயர் விருப்பம்.

## காந்தி நினைவு விழா

அரியாலைப்பிட்டி செல்.

''காந்தியடிகளின் வாழ்வு ஓர் இலக்கியமாக மிளிர்வதை நாம் அறியலாம். காந்தியின் அகிம்சையை ஒவ்வொருவரும் கடைப்பிடிப்போமானால் உலகில் யுத்தங்கள் ஏற்படமாட்டாது. ஒரு சமாதான பூமியில் மக்கள் சந்தோஷமாக வாழலாம். இதனால் உறுதியான ஆயுளும் கடவுளுடைய அன்பும் கிடைக்க ஏதுவாகின்றது.'' மேற்கண்டவாறு அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தினரால் கொண்டாடப்பட்ட காந்தி நினைவுதினத்தின்போது தலைமை வகித்துப்பேசிய அரியாலையூர்க் கவிஞர் திரு. வே. ஐயாத்துரை குறிப்பிட்டார்.

திரு. க. தங்கராசா பேசுகையில் எவ்வாறு காந்திஜி தமது வாலிப பராயத்திலும் நாட்டுப்பற்று மிகுந்ததினால் போராட்டங்களில் ஈடுபட்டாரோ அதேபோல நம் நாட்டு வாலிபர்களும் முன்னேற்றமான விடயங்களிலும் நாட்டின் வளர்ச்சியிலும் பங்குபற்றவேண்டும் என்றார்.

டாக்டர் எம்.ஜி. தில்லைநாயகம், ஐ.வரதராசா ஆகியோர் உட்பட பலர் பேசினர்.

0 0 0

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய் நாவலர் பாடசாலை மண்டபத்தில் காந்திஜி நூற்றாண்டுவிழா கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியர் திரு. எம். வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆசிரியர் திருமதி கே. சரஸ்வதி, எஸ். நடராசா, ஏ. பொன்னம்பலம், மாணவி ஆர். தேவமனோகரியுட்பட மற்றும் பலர் காந்திஜியின் சேவை குறித்துப் பாராட்டிப் பேசினர்.

கிரிக்கெட்

# யாழ். இந்துவிடம் பற்றிக்ஸ் தோல்வி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். இந்துக் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், யாழ். இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 144 ஓட்டங்களைப் பெற்றது.

சென். பற்றிக்ஸ் பந்து வீச்சு வீரர், யோகேந்திரா 61 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும், ஜோசேப் 40 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

சென். பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 83 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பொன்ராசா 26 ஓட்டங்களைப் பெற்றார். இந்துக் கல்லூரி பந்தெறி வீரர் கந்தையா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

யாழ். இந்துக் கல்லூரி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 143 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டியின் காப்டன் அமலராஜா 32 ஓட்டங்களைப் பெற்றார். சென். பற்றிக்ஸ் பந்துவீச்சு வீரர் ஜோசேப் 40 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

சென். பற்றிக்ஸ் 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 46 ஓட்டங்களைப் பெற்று யாழ். இந்துக் கல்லூரியிடம் 158 மேலதிக ஓட்டங்களால் தோல்வியுற்றது.

(தே. நி)

## 7 கோல்களால் வெற்றி

உடுப்பிட்டி, செவ்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் மூன்றாவது ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இச் சுற்றுப் போட்டியில் இறுதியாக வதிரி டைமன்ட் கோஷ்டியும், வல்வெட்டித்துறை யுனைட்டெட் கழகத்தினரும் மோதிக்கொண்டனர்.

போட்டி முடிவில் வல்வெட்டித்துறையுனைட்டெட் கழகம் வதிரி டைமன்ட் கோஷ்டியை 7 0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. சி. நாதன் இப்போட்...

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், செவ்வாய்

அராலி வடக்கு தமிழரசுக் கட்சிக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர். திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. க. சுப்பிரமணியம் ஜே.பி. உபதலைவர்கள் ஜே. டி. ஸ்ரோமூர். பொ. செல்வக்குமாரசாமி. காரியதரிசி க. சிவஸ்கந்தா. உபகாரியதரிசி ச. ஆனந்தன், தனாதிகாரி எஸ். சச்சிதானந்தம். நிர்வாகிகள் திருவாளர்கள் வே. கந்தர், சி. ஐயாத்துரை, கே. மாணிக்கவாசகர், வே. முத்துலிங்கம், க. ஜெயரத்தினம், வே. பாலசுப்பிரமணியம், தா. சுப்பிரமணியம்.

0 0 0

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்க 42-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. இ. தம்பையா ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: இ. தம்பையா ஜே. பி., உபதலைவர்: சி. பரமலிங்கம், காரியதரிசி: இ. சண்முகநாதன், உபகாரியதரிசி: இ. ஆறுமுகம், தனாதிகாரி: பொ. ஆறுமுகம். கணக்குப் பரிசோதகர்கள்: மு. கணபதிப்பிள்ளை வே. சரவணமுத்து

0 0 0

புன்னாலைக்கட்டுவன், செவ்

உரும்பராய் இந்துக் கல்லூரி விஞ்ஞான மன்ற புதிய நிர்வாகிகள் வருமாறு:- தலைவர்:- எஸ். இந்திரராசா, உப தலைவர்:- எஸ். பாலசந்திரன், செயலாளர்:- எஸ். மகேந்திரன், உப செயலாளர்:- எஸ்- சிவசோதிமலர், பணப்பொறுப்பாளர்:- எஸ். குமரேஸ்வரராசா. நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது

## கல்வி அமைச்சருக்கு மகஜர்

உடுப்பிட்டி, செவ்.

'மார்க்கட், சேரிஒழிப்பு வேலைகளுக்கு

# ஆலோசனைகளில் வீணாக நேரத்தை போக்கவேண்டாம்'

## சபையில் உதவிமேயர்

— காரியாலய நிருபர் —

யாழ்ப்பாணம், புதன்

''கூட்டமென்றால் அங்கு ஒழுங்கிருக்க வேண்டும். தலைமை வகிப்பவரின் சொல்லை மதித்து நடக்க வேண்டும் ஒழுங்கும் பணிவும் இல்லாவிட்டால் அங்கு அமைதி நிலவாது.''

மாநகரசபையின் விசேஷ கூட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானபோது தனது சொல்லையும் மீறி பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கஎழுந்து நின்ற அங்கத்தவரான திரு. அ. விஸ்வநாதனைப் பார்த்து, முதல்வர் திரு. எஸ். நாகராஜா இவ்வாறு சொன்னார்.

கூட்டம் சபை நிலையிலிருந்து மாறி குழுநிலையிலிருப்பதால் எந்தப்பிரேரணையும் அப்போது பிரேரிக்கமுடியாதென்றும், மார்க்கட் கட்டடம் சம்பந்தமாக ஆலோசனைகள் மட்டுமே தெரிவிக்கலாம் என முதல்வர் மேலும் இங்கு தெரிவித்ததைத் தொடர்ந்து திரு. விஸ்வநாதன் தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

மார்க்கட் கட்டட ஒப்பந்தம் மீண்டும் புதியசிலதிருத்தங்களுடன் கோருவதென இங்கு முடிவு செய்யப்பட்டபோது முதல்வர் திரு. நாகராஜா இங்கு கூறியதாவது:

மார்க்கட் கட்டத்தேவையான 30 லட்சம் ரூபாவை உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியினரிடம் கேட்டிருந்தோம். அவர்கள் முதலில் 6 லட்சம் ரூபாவை மட்டும் தர ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

கடனை வருடமொன்றிற்கு நாலரை வீத வட்டியுடன், வருடா வருடம் 24,000 ரூபா வீதம், 25வருடத்தவணையில் கட்டவேண்டும் என்றார்.

இதனை சபை ஏகமனதாக ஏற்றதைத் தொடர்ந்து மார்க்கட் அமைப்பு பற்றி அங்கத்தவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

கே. வி. தெய்வேந்திரம்: புதிதாக டெண்டர் கோர வேண்டும்.

வீரசிங்கம்: அதனையே நானும் விரும்புகின்றேன்.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர்: புதிதாக டெண்டர் கோர...

...செலவழிக்காமல் கட்டட வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான் இப்போது அவசியம்.

திரு. கே வி. தெய்வேந்திரத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்து பொதுவேலைபகுதி என்ஜினியர் திரு. வைத்திலிங்கம் மார்க்கட் படத்தைச் சபையில் விளக்கினார்.

கூட்டத்தில் இரண்டாவதாக சேரி ஒழிப்புத் திட்டம் பற்றி விவாதம் நடந்தது, இதற்கு ஒரு லட்சம் ரூபா கொடைப் பணமாகக் கிடைத்துள்ளதாக முதல்வர் தெரிவித்ததைத் தொடர்ந்து சுண்டிக்குளி வட்டார அங்கத்தவரான திரு. என் அந்தோனிப்பிள்ளை பேசியதாவது:

சேரி ஒழிப்பில் முதலாவதாகக் கவனிக்கப்படவேண்டியது எனது தொகுதியிலுள்ள நரியன் குண்டுப்பகுதிதான். இங்குள்ளவர்கள் கள்ளத்தோணிகள் அல்ல. (இப்படிச் சொல்ல நான் வேதனையும் வெட்கமும் அடைகின்றேன்) இங்குள்ளவர்கள் வெளியிடங்களிலிருந்து வந்தவர்களுமல்ல. இவர்கள் இங்கு பரம்பரையாக சேரிகளிலேயே வாழ்ந்து வருபவர்கள். இவர்களுக்கு சேரியை ஒழித்து வீடு கட்ட சபை முன்வந்தால் திருத்தம் செய்யும் வரை அவர்கள் தங்க நான் வசதி செய்து கொடுப்பேன்.

திரு கே. எஸ். நடராசா: வட்டாரத்துக்குத் தக்கதாக இதைச் செய்ய வேண்டும்.

திரு. அன்ரனி: எனது வட்டாரம் பின் தங்கியவட்டாரம். அதையும் கவனிக்க வேண்டும்.

திரு. பேரின்பநாயகம்: எனது குருநகர்பகுதிமிகமுக்கியமானதாகும். இங்குள்ள சேரிகளை ஒழிக்க, மாநகரசபை ஆணையாளர் 6 லொறிகளில் ஊழியர்களுடன் அண்மையில் வந்து பின்னர் 2 மாத அவகாசம் கொடுத்ததை இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே எனது தொகுதியையும் சேரி ஒழிப்புத்திட்டத்தில் முக்கியமாகக்கவனிக்க வேண்டும்.

## இளைஞர் பாராட்டுவர்

சங்கானை; திங்கள்

முன்னைநாள் சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலத்திற்கு சேவைநலம் பாராட்டுவிழா இம்மாதம் 12-ம் திகதிமாலை 6 மணிக்கு நிகரை வயிரவர் ஆலயமுன்றலில் சங்கானை இளைஞர் பகுத்தறிவுக் கழகத்தாரால் நடாத்தப்பட விருக்கின்றது

திரு. முருகானந்தம் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம பேச்சாளர்களாக சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. சி, ஆறுமுகம் உட்பட மற்றும் பல உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர்களும் கலந்துகொள்வர். இன்னிசை விருந்தும் நாடகங்களும்இடம்பெறும்.


மானிப்பாய்

**வெஸ்லி சினிமா**

தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா. போயா 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த

**ஆண்டவன் கட்டளை**

**வின்ஸர்**

(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த

**குடியிருந்த கோயில்**

இணுவில்

**ஸ்ரீ காலிங்கன்**

தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - ஜி. வரலெட்சுமி
நடித்த

**நான் பெற்ற செல்வம்**

4-வது வாரம்!

**ராஜா**

(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடிக்க...


## கல்முனைக்கு விவசாயக் கோஷ்டி

சங்கானை, செவ்வாய்

இம்மாதமத்தியில்கல்முனையில் நடைபெறவிருக்கும் விவசாய அறிவுப்போட்டி மிக விறுவிறுப்பாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வவனியா மாவட்டத்தில் முதல் இடம் பெற்ற கனகராயன்குள மகாவித்தியாலயத்திற்கும் யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மகாஜனக் கல்லூரிக்குமிடையே கடுமையான போட்டி நிலவுகின்றது.

செல்வன் கு. குமாரசாமி, செல்வன் க. கிருஷ்ணபிள்ளை, செல்வன் க. சிவசேகரம் ஆகியோரைக் கொண்ட மாணவர் கோஷ்டியே கல்முனைக்குச் செல்லவிருக்கின்றது. இறக்காமம் ஓட்டுத்தொழிற்சாலை, கல்லோயாத் திட்டம் முதலியவற்றிற்கும் சென்றுபார்வையிடும் இக்கோஷ்டி தெரிவுபெற்ற விவசாயக் கழகங்களுடன் தொடர்பு கொண்டு விவசாய விஸ்தரிப்பு முறைகளையும் கண்டறியும்.

## பிரியாவிடை

உடுவில், செவ்.

பாடசாலை மாணவர்கள் அப்பாடசாலை வளர்ச்சிக்கு தாங்கள் நல்லாயிருக்கும் காலங்களில் உதவிசெய்ய முன்வந்தால் அதுவே அவர்களின் நன்றியை விளங்கச் செய்யும்.

மானிப்பாய் மெமோறியல் வித்தியாலய விஞ்ஞான ஆசிரியர் திரு. வி. தர்மசீலன் இடமாற்றம் பெற்றதைத் தொடர்ந்து மாணவர்கள் அளித்த விருந்துபசார பிரியாவிடைக் கூட்டத்தில் பேசிய ஆசிரியர் திரு. ஞானசிகாமணி அன்னப்பா மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பாடசாலைஅதிபர் திரு, வி. ஜி. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆசிரியர்கள் பண்டிதர் கதிரவேலுப்பிள்ளை, சின்னத்துரை, செல்வன் கமலசேகரம். பன்னீர்செல்வன் ஆகியோரும் பேசினர், திரு. தர்மசீலனுக்கு மாணவர்கள் அன்பளிப்பு ஒன்றும் வழங்கினர்.

## 'அண்ணா அஞ்சலி' வெளிவரும்'

அளவெட்டி, செவ்.

'அண்ணா அஞ்சலி'' என்னும் நூலை கவிஞர் விஜயேந்திரன் விரைவில் வெளியிடவிருக்கிறார்.

'சிவதீட்சையில்

# சிறுவரின்ஆர்வம் அவர்களது எதிர்கால அத்திபாரம்'

## சிவதீட்சை வைபவத்தில் உபசபாநாயகர்

உடுப்பிட்டி, செவ். இக்கூட்டத்திற்குத் தலை...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்கால அத்திபாரம்'

## சிவதீட்சை வைபவத்தில் உபசபாநாயகர்

உடுப்பிட்டி, செவ்.

''சைவம் பாரம்பரியம் மிக்க ஒரு சமயமாகும். சைவர்களையும் சைவநெறியையும் இன்று உலகம் பெரிதும் மதித்து வருகின்றது. சைவர்களாகிய நாம் சைவ சின்னங்களை அணிய ஏன் தயங்கவேண்டும். சைவசின்னங்களைத்தரிக்க நாம் வெட்கப்படக்கூடாது''

இவ்வாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம் வதிரி வடக்கு மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நேற்று நடைபெற்ற இலவச சிவதீட்சை வைபவமொன்றில் பேசுகையில் கூறினார்.

உபசபாநாயகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''சைவத்திற்கென சில பண்புகள் உள்ளன. அவற்றை நல்லமுறையில் பழகிக்கொள்ளவேண்டும். இவ்வித சமயப்பணிகள் மேலும் சிறப்புற்று வளரவேண்டும். தீட்சை பெறுவதில் சிறுவர்கள் காட்டும் ஆர்வம் அவர்களின் நல்ல எதிர்காலத்திற்கு ஓர் அத்திபாரமாகும்''

உடுப்பிட்டி வட்டாரக் கல்விஅதிகாரி திரு. எஸ். மகேஸ்வரஐயர் பேசுகையில், ''இந்தியாவில் ஆதிகாலம் முதல் பல சமயங்கள் தோன்றின. அங்கு தோன்றிய சமயங்கள் யாவற்றிற்கும் அடிப்படையாக ஒரு பிரச்னை இருந்தது. கர்மத்தினால் ஏற்படும் பிறவியை எப்படி நீக்குவது என்பதே இப்பிரச்னையாகும்.

இப்பிரச்னையைத் தீர்த்து வைக்க ஞானிகள் பல வழிகளைக் கூறியுள்ளனர். இதற்குச் சைவசமயம் கூறும்வழி என்ன வென்றால் பிறவியை நாம் தாண்டவேண்டுமாகில் இறைவனடிசேர வேண்டுமென்பதேயாகும்'' என்று கூறினார்.

இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலை முன்னாள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பேசுகையில், ''தீட்சை என்பது சைவ மதத்தின் புனிதமான அங்கம். பயபக்தியுடன் ஒவ்வொரு சைவர்களும் பழக வேண்டும். காலத்துக்கு ஏற்ப நாம் வாழப்பழக வேண்டும். பெரியோரைப் பின்பற்றி நாம் நடக்க வேண்டும். பெரியோர்கள் இதற்கு முன்மாதிரிகாட்டி நடக்கவேண்டும்'' என்று குறிப்பிட்டார்,

திரு. கே. பி. ஹரன் பேசுகையில், ''மனக்கவலை, கஷ்டம், பயம் என்பனவற்றைத் தீட்சை போக்கி விடுகின்றது. எக்கஷ்டங்கள் வரினும் 'சிவா' எனச் சொல்வதினால் மனப்பளு குறையும்; புதுத்தெம்புபிறக்கும். வாழ்க்கைக்குப் பற்றுக்கோலாக இருப்பது பஞ்சாட்சர மந்திரமே. இம்மந்திரங்களை ஓதினால் பாவங்கள்நீங்கும். தீட்சையைக் கண்டு எவரும் பயப்படவேண்டியதில்லை'' என்று சொன்னார்.

சைவப் புலவர் திரு. சி. வல்லிபுரம் பேசும்பொழுது, சமய நெறிதான் வாழ்க்கையைவளம்படுத்தும் என்று கூறினார்.

சைவப்புலவர் திரு. ஆர். செல்வத்துரை, திரு. ஆ. கந்தவனம், தலைமை ஆசிரியர் திரு. த. இரத்தினம் ஆகியோரும் பேசினர். ஆசிரியர் திரு. ரி. கனகரத்தினம் நன்றியுரை கூறினார்.

வைபவ இறுதியில் பிரம்மஸ்ரீ பொன்னுத்துரைக் குருக்களினால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் உட்பட சுமார் 200 பேருக்கு இலவச சிவதீட்சை அளிக்கப்பட்டது. தலைமையாசிரியர் திரு. த. இரத்தினம் இலவச தீட்சையை ஒழுங்கு செய்திருந்தார்.


THAMBY & CO.,

ACCEPT

**Savings Deposits**

Interest Payable on Monthly Minimum Balances

at 8% per Annum

at 10% per Annum for Charitable Institutions

*Head Office* : Thirunelvely, Jaffna.

*Branch* ,, : Vannarponnai, Jaffna.


மோதிக்கொண்டனர்.

போட்டி முடிவில் வல்வெட்டித்துறையுனைட்டெட் கழகம் வதிரி டைமன்ட் கோஷ்டியை 7 0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. சி. நாதன் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

# இன்றைய பலன்

புதன்கிழமை

(12-2-69)

தை மாதம், 30 உ

திதி- தசமி பகல் 9-24 மேல் ஏகாதசி

நட்சத்திரம்- கேட்டை பகல் 9-32 மேல் மூலம்.

ராகுகாலம் - 12-34 — 2-04.

சுபநேரம்- 5-04 — 6-34.

இன்று பிறந்தவர்களுக்கு — கைத்தொழில் புரிவோர்க்கு கனதனமும் விவசாயிகளுக்கு தானிய விருத்தியும் காதலர் வாழ்வில் களிப்பு மிகுதியும் யந்திர வளர்ச்சி, உத்தியோகத்தர்களுக்கு உயர்வும் பாடகர்களுக்கு மந்தநிலை. கல்வி பயிலுவோர்க்கு களிப்பும், வணிகருக்கு இவ்வாண்டு நல்லாண்டாகும்.

மேஷம்- பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.

ரிஷிபம்- பாதையில் தடைபார்த்துநட.

மிதுனம்- குடும்ப மகிழ்ச்சி, குழந்தைச் செல்வம்.

கடகம்- பகைவர் உறவு பண நஷ்டம்.

சிம்மம்- நல்வழிநாடல் நகைச்சுவை.

கன்னி- தொழில் நலன் தொடர்புகள் பெருகும்.

துலாம்- பாக்கிய விருத்தி, பலிதமும் உண்டு.

விருச்சிகம்- நில்லாது பொருள் சொல்லாது போகும்.

தனுசு- மறதிக்குணம், மனப்போராட்டம்.

மகரம்- அன்பு மனம், ஆனந்தநிலை.

கும்பம்- பொருள் பிணக்கு, பொருதவரும் பகை.

மீனம்- இல்லற பந்தம் இணைப்பில் இறுகும்.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

...லைரசா. நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## கல்வி அமைச்சருக்கு மகஜர்

உடுப்பிட்டி, செவ்.

இன்றைய நிலையில் தட்டச்சு சுருக்கெழுத்துப் படிக்கும் மாணவர்கள் அநேகர் உள்ளனர். இவர்கள் அப்பாடங்களை நன்கு கற்றும் பரீட்சை எடுப்பதற்கு வசதியாகத் தட்டச்சுக்கள் இல்லாமையால் ஏமாற்றம் அடைகின்றனர். இருபாடங்களையும் ஒருபாடமாகக் கருதும் எங்கள் கல்வி முறையில் இது மாணவர்களுக்குப் பெரும் ஏமாற்றமாகும்.

ஆதலால் தட்டச்சுப் பரீட்சையை மூன்று நாட்கள் தொடர்ந்து நடாத்தினால் எத்தனையோ பரீட்சார்த்திகளுக்கும் போதிய அவகாசமும் வசதியும் கிடைக்கும்.

இவ்வாறு கோரும் மகஜரொன்றை வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கம் கல்வி அமைச்சர் திரு, எம். ஆர். ஏ. இரியகொல்லைக்கு அனுப்பி வைத்துள்ளது.

## அனுதாப நிகழ்ச்சிகள்

கோப்பாய், செவ்.

கோப்பாயில் அறிஞர் அண்ணாவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் நிகழ்ச்சிகள் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன. சில இடங்களில் கறுப்புக் கொடிகள் இன்னும் பறந்த வண்ணமேயுள்ளன நேற்று மூன்தினம் கோப்பாய் நாவலடி சனசமூக நிலையத்தாரால் அனுதாபக் கூட்டமொன்றுநடாத்தப்பட்டது.

## அண்ணாவின் பல தொண்டு

ஏழாலை, செவ்வாய்

அறிஞர்அண்ணாவுக்கு அஞ்சலிசெலுத்துமுகமாக ஓர் அனுதாபக் கூட்டம் சனிக்கிழமை மாலை 6மணிதொடக்கம் ஏழாலை மேற்கு சாடியடியிலுள்ள 'சரஸ்வதி' சனசமூக மன்ற நிர்வாகிகளால் நடத்தப்பட்டது. ஏழாலை கிராமச்சங்க அக்கிராசனர் திரு, க. சிவகுரு தலைமை வகித்தார்.

அண்ணாவின் ஆத்ம சாந்திக்கான மௌனப் பிரார்த்தனையின் பின் அவரது கொள்கைகள்; நாட்டுப்பற்று தேச சமூகத்தொண்டு அரசியல் ஞானம் என்பன பற்றி உடுவில் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் மற்றும்பலரும் உரை நிகழ்த்தினர்.

கே. வி. தெய்வேந்திரம்: புதிதாக டெண்டர் கோரவேண்டும்.

வீரசிங்கம்: அதனையே நானும் விரும்புகின்றேன்.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர்: புதிதாக டெண்டர் கோருவதோடு மட்டுமல்லாமல் உடனடியாகவே கட்டட வேலையையும் ஆரம்பிக்க வேண்டும்.

திரு நாகராஜா. மார்ககட் மேல் மாடியில் பல முக்கிய திருத்தங்கள் செய்ய வேண்டும். கீழ் மாடியிலுள்ள கடைக்காரர் இருக்கவென வாசஸ்தலம் அமைப்பதை ஏன் ரத்துச் செய்யக் கூடாது. ஆனல் கூடியகடைகளைக் கட்டவும் முடியும். இதைச் சபை முடிவு செய்ய வேண்டும் என விரும்புகிறேன்.

தா. ச, துரைராசா: மேலே கடைக்காரர் தங்க அறைகள் கட்டுவது அசௌகரியமானதுதான். மேலேயும் கடைகள்தான் கட்டவேண்டும். அத்துடன் ஒவ்வொரு புளக்குக்கும் தரை இறங்கத் தனியே படிகள் அமைக்க வேண்டும். புதிய முறையில் மலசல கூடங்களையும் ஒரு கரையில் அமைப்பதோடு மார்க்கட்டின் முகப்பை நகர மண்டபம் நூல் நிலையம் போன்ற அமைப்பில் மணிக்கூடு வைத்துப் பொருத்தி அமைக்க வேண்டும்,

அந்தோனிப்பிள்ளை: இது நல்ல யோசனை. இத்துடன் மேல்மாடியில் ஒரு பொலிஸ் பாதுகாப்பு நிலையம் உபதபால் தொலைபேசி நிலையம். நூலகம் ஆகிய வசதிகள் கொண்ட சுப்பர் மார்க்கட்டாக அமைப்பது நன்றென நான் கருதுகின்றேன்.

என். ரி. செல்லத்துரை: எதிர்காலத்து வசதியும் கருதியே கட்டவேண்டும்,

ரி. கே. ராஜரத்தினம்: மார்க்கட் எப்படி இருக்க வேண்டுமென்பதில் மக்களுக்கு அக்கறையில்லை. கூடிய கெதியில் கட்ட வேண்டும் என்பதே அவர்களது அக்கறையாகும்.

ஏ? விசுவநாதன்: மார்க்கட்டில் மீன் சந்தை மட்டும் இருந்தால் போதாது. மேல் மாடியில் குளிர்சாதன வசதியுடன் மரக்கறி, பழவகை இறைச்சி, மீன் ஆகிய நான்கும் விற்கவும் சேகரித்து வைக்கவும் கூடியதாக அமைத்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

ஆ. துரைராஜசிங்கம்: மார்க்கட் படம் போட்டது கட்டடக்கலை நிபுணர்கள். நாங்கள் இதில் என்ன திருத்தம் செய்ய முடியும்? கௌரவ அங்கத்தவர்கள் திருத்தம் சொல்கிறார்கள் தான். எனக்கென்றால் ஒன்றும் புரியவல்லை, ஏதோ ஆலோசனையில் நேரத்தைச்

... வந்து பின்னர் 2 மாத அவகாசம் கொடுத்ததை இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே எனது தொகுதியையும் சேரி ஒழிப்புத்திட்டத்தில் முக்கியமாகக்கவனிக்க வேண்டும்.

திரு. துரைராஜசிங்கம்: 23 வட்டாரங்களுக்கு மட்டும் தான்.

இதற்கென ஒதுக்கப்பட்ட பணம் நரியன் குண்டுப் பகுதிக்கு மட்டும்தானா?

திரு. எஸ் நாகராசா:

திரு. துரைரசசிங்கம்: அப்படியென்றால் குருநகர், நரியன்குண்டு பகுதிகளை முக்கியம் கவனிக்க வேண்டும். எனது தொகுதியில் இராமேஸ்வரத்துக்குச் சொந்தமான காணிகள் உண்டு.

அந்தக்காணியிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அங்கு அனுப்ப முடியாத கஷ்டம் ஏற்படுகின்றது. எனவே இதையும் கவனிக்க வேண்டும்.

திரு. போல்ராஜ்: எனது தொகுதி பாஷையூர் மக்கள் நான்கு பக்கமும் போகமுடியாது.

திரு. எஸ். நாகராஜா: கிழக்கே போக முடியும். (சுடலைப்பக்கம்) சபையில் சிரிப்பு)

சேரி ஒழிப்புத் திட்டத்துக்கான இடம்தெரிவது, மாதிரிப் படம்வரைவது, கேள்விப்பத்திரம் கோருவது, பணம் வழங்குவது ஆகிய சகல அதிகாரங்களையும் நகர் முதல்வருக்கே வழங்குவதென திரு. கே. வி. தெய்வேந்திரம்கொண்டு வந்த பிரேரணையை, திரு. டி. கே. ராஜரத்தினம் ஆமோதித்ததுடன் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது. (கா. நி)

## சிவராத்திரிக்கு நாடகம்

சுழிபுரம், செவ்வாய்

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மூவர் நாடக மன்றத்தினர் வழக்கம்பரையில் நாடகம் ஒன்றை நடாத்தவிருக்கின்றனர். சிவராத்திரி கண்விழிப்பை யொட்டியே நாடகம் நடத்தப்படுகின்றது. முதல்முறையாக மேடையேற்றப்படும் 'நவீன நாரதர்' என்னும் புராண நாடகமே இந்த நாடகமாகும்.

## பக்தர்களுக்கு பாதுகாப்பு

நல்லூர், செவ்வாய்

திருக்கேதீஸ்வரம் செல்லும் பக்தர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக இங்கு பொலிஸ் பாதுகாப்பு விஸ்தரிக்கப்படவிருக்கிறது.


4-வது வாரம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

10-30, 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா

மற்றும் பலர் நடித்த

**ஒளி விளக்கு**

(ஈஸ்ட்மென் கலர்)

(எஸ். ரி. ஆர். வெளியீடு)


## 'அண்ணா அஞ்சலி' வெளிவரும்'

அளவெட்டி, செவ்.

'அண்ணா அஞ்சலி'' என்னும் நூலை கவிஞர் விஜயேந்திரன் விரைவில் வெளியிடவிருக்கிறார்.

திரு. அண்ணாதுரையின் ஞாபகார்த்தமாக ''அண்ணா அஞ்சலி'' என்ற இந் நூலை அவர் வெளியிடவிருக்கிறார்.


மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி 2-45, 6-45, 9-45.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30, 9-30.

ஜெய்சங்கர் — விஜயநிர்மலா

மற்றும் பலர் நடித்த

**நீலகிரிஎக்ஸ்பிரஸ்**

(பாஸ்களும், சலுகைகளும் ரத்து)

வெலிங்டன் — யாழ்நகரில்

தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு

★மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.

★நடிகையர் திலகம் சாவித்திரி

★நம்பியார் ★நாகேஷ் ★ராகினி

நடித்த

கௌரி பிக்சர்ஸ் **பரிசு**

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்

S S. வாசன் அவர்களால்

ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற

இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

தமிழ்நாடுசென்று விழாவைப் பார்க்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

ஒவ்வொரு தமிழனும் அவசியம் பார்க்கவேண்டிய படம்.

கிங்ஸ்லி பிளாஸா

மற்றும் சினிமாஸ் திரைகளில்

சிவாஜி—கே. ஆர். விஜயா

முத்துராமன் நாகேஷ்—எல். விஜயலக்ஷ்மி

நடித்த

**ஊட்டிவரைஉறவு**

(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பாய் கலவரங்களில் 22 பேர் துப்பாக்கிக்குப் பலி

## பகலிலும் ஊரடங்கு அமுல் மாமூல் நிலை திரும்புகிறது

புதுடில்லி, பெப். 11

**பமபாயில் நேற்றிரவும பலஇடங்களில் குழப்பங்கள் இடமபெற்றுள்ளன. நாலு இடங்களில் குழப்பங்களை அடக்க பொலிசார் அழைக்கப்பட்டனர்.**

இரண்டு இடங்களில் பொலிசார் சுட்டபொழுது ஒரு இடத்தில் இருவர் கொல்லப்பட்டனர். இன்னொரு இடத்தில் ஒருவர் காயமடைந்தார். இதுவரை குழப்பங்களை அடக்குவதற்காகப் பொலிசார் சுட்டதில் 22 பேர் பலியாகியிருக்கிருர்கள்.

நேற்றிரவு ஆங்காங்கே இடம்பெற்ற சில சம்பவங்ளைத் தவிர பொதுவாக நிலைமை அமைதியாகவிருப்பதாக பொலிசார் கூறினர்கள். பாதுகாப்பு ஏற்பாடாக இன்று காலையிலிருந்து மாலைவரையில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்றது. மாலையில் இரண்டு மணிநேரம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் மீண்டும் இரவில் அமுலில் இருக்கும். பம்பாயில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக ராணுவத்தினரும் எச்சரிக்கையாக இருக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்தவாரம் பாரததுணை பிரதம மந்திரி பம்பாய்க்கு விஜயஞ் செய்ததைத்தொடர்ந்து பம்பாயில் கலவரங்கள் வெடிக்கத் தொடங்கின. சிவசேனை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நகரின் பலபகுதிகளிலும் கலவரங்களில் ஈடுபட்டார்கள் பஸ்களுக்குத் தீ வைத்தும், ரயில் நிலையங்களைத் தாக்கியும் பொலிசாருடன் மோதியும் பல இடங்களில் அவர்கள் கலவரங்களைக் கட்டுக்கடங்காமல் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்

ஆர்ப்பாட்டங்கள் மிக அமைதியாக நடைபெறும் என்று முன்னர் சிவசேனைத் தலைவர் திரு. தாக்கரே அறிவித்திருந்தபோதிலும் பின்னர்கலவரங்கள் மோசமாக நடைபெற்றதைத் தொடர்ந்துஅவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். திரு தாக்கரே இப்பொழுது அமைதியாக இருக்கும்படி தமது சகாக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

## கிழக்கு ஜெர்மனி தடைஉத்தரவு: அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் கண்டனம்

### சோவியத் பத்திரிகை சீற்றம்

மேற்குபெர்லின் பெப். 11

மேற்கு பெர்லினுக்கு மேற்கு ஜெர்மன் சட்ட உறுப்பினர்கள் கிழக்கு ஜெர்மன் வழியாகப் போவதற்கு தடைவிதிக்கப்பட்டதை அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கண்டித்ததைத் தொடர்ந்து, மேற்கு பெர்லினுக்கு பிரிட்டிஷ் பிரதமர் வில்சனும், அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனும் அண்மையில் விஜயம் செய்யவிருப்பதை சோவியத் அரசாங்க பத்திரிகையான இஸ்வெத்தியா கண்டித்துள்ளது.

மேற்கு ஜெர்மனியில் இருந்து கிழக்கு ஜெர்மனி ஊடாக மேற்கு பெர்லினுக்குள் மேற்கு ஜெர்மன் சட்டமன்ற உறுப்பினர்கள் தரைமார்கமாகப் போவதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதற்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசு நாடுகள் கூட்டாக பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

மேற்கு பெர்லினில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்காக மேற்கு ஜெர்மனி ஏற்பாடு செய்திருப்பதைத் தொடர்ந்து கிழக்கு ஜெர்மனி இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் மேற்கு பெர்லினுக்கு விஜயம்செய்யவிருக்கிருர். அதையடுத்து இம்மாதம் 27-ம் திகதி அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனும் மேற்கு ஜெர்மனிக்கு விஜயம்செய்யவிருக்கிருர்.

இந்த விஜயங்கள் அங்கு தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையை மேலும் குழப்பிவிடக்கூடும் என்று சோவியத் பத்திரிகையான இஸ்வேஸ்தியா கருத்து வெளியிட்டிருக்கிறது. மேற்கு பெர்லினில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது ஆத்திரமூட்டும் நடவடிக்கையென்று இஸ்வெஸ்தியா கூறியுள்ளது.

மேற்கு ஜெர்மன் ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக கிழக்கு ஜெர்மனி வழியாக தேர்தல் குழு அங்கத்தவர்கள் சுமார் 1036 பேர் மேற்கு பெர்லினுக்குப் போகவிருந்தார்கள். தரைமார்க்கமான பாதைகளை கிழக்கு ஜெர்மனி மூடவிருப்பதால் அவர்கள் விமான மார்க்கமாகப் போகக்கூடும் என்று கருதப்படுகின்றது.

இதேவேளையில் வார்ஸோ ஒப்பந்த நாடுகளின் சுப்ரீம் கமாண்டர் கிழக்கு ஜெர்மனிக்கு தற்பொழுது விஜயம்செய்திருக்கிருர்.

## கப்பலின் சேவை

வெள்ளவத்தை, செவ்.

இலங்கையில் இவ்வளவு காலமும் தங்கியிருந்து இலவச வைத்திய சேவை செய்துள்ள அமெரிக்க 'ஹோப்' கப்பலை எதுவித அனுமதியுமின்றிக் கடந்த போயா தினமும் முதல் நாளும் பொதுமக்கள் சென்று பார்வையிட்டனர்.

பல்லாயிரக் கணக்கான பாடசாலை மாணவிகளும் வெளியூர்களிலிருந்து வந்திருந்த கிராமிய மக்களும் இக்கப்பலை மிகவும் ஆர்வத்தோடு பார்வையிட்டனர். 'ஏர் கண்டிஷன்' செய்யப்பட்ட குளுகுளு படுக்கையறைகளும் பூப்போன்ற மெத்தைகளும் பாலினும் வெண்மையான அவற்றின் விரிப்புக்களும் பார்த்தவர்களுக்கு இதென்ன ஆஸ்பத்திரியா அல்லது சொர்க்க புரியா என்ற நினைவைத் தான் ஏற்படுத்தும்.

குழந்தைகள் படுக்கையறையில் ஒவ்வொரு மெத்தைகளிலும் பெரிய குழந்தை, நாய், யானைப் பொம்மைகளும் வேறு அமெரிக்க விளையாட்டுச் சாமான்களும் அழகாகவைக்கப்பட்டிருந்தன. சத்திரசிகிச்சைகளையும் புதிய வைத்திய முறைகளையும் 'டெலிவிஷன்' கருவி மூலம் காட்டும் காட்சி கண் கூடமும் அதனுள் இரும்புக் கதிரைகளும் அழகாகக் காட்சி தந்தன.

அக் காட்சிக்காண் வகுப்புக் கூடத்துள் இருந்த கரும் பலகையில் வெண்கட்டியால் 'ஆய்போவன்' என்று சிங்களத்திலும் 'வணக்கம்' என்று தமிழில் சிறுதவருேடு எழுதப்பட்டிருந்தது.

சுமார் 50,000 நோயாளிகளுக்கு மேல் குணப்படுத்திய 'ஹோப்' கப்பல் இன்று எம்மை விட்டுப் பிரிந்து விட்டது. எனினும் அதன் பசுமையான நினைவுகள் பலருக்கு இருக்கத்தான் செய்யும் என்பது நம்பிக்கை.

## "வழிகாட்டியை இழந்துவிட்டது"

உடுப்பிட்டி, செவ்.

செந்தமிழ்க் காவலர் அறி

## ஈவிரக்கமற்றமுறையில் இடமாற்றம் நடைபெறுகிறது

உடும்பராய், செவ்.

''மனிதனுக்காகத் திட்டமேயன்றித் திட்டத்துக்காக மனிதனல்ல ஆசிரியர் இடமாற்றத்தில் இதற்கு முன் கடைப்பிடித்து வந்த கொள்கைகள், சலுகைகள் இந்த ஆண்டில் முற்ருகப் புறக்கணிக்கப் பட்டிருப்பது உண்மையே. முன்னர் கொடுத்த சிறுசலுகைகளைக் கூடக் கல்வி மந்திரியின் புதிய நிரந்தரக் காரியதரிசி கைவிட்டு விட்டு இந்த ஆண்டில் ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தைக் கொஞ்சம் கூட ஈவிரக்க மற்ற முறையாக அமுல் செய்துவருகிருர். 1969இடமாற்றத் திட்டத்தை அமுல் செய்யும் வன்கண்மையை வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் நீதியான முறையில் தனது எதிர்ப்பைக் காட்டுவது சரியென்பதே எமது கொள்கையும் நேரடியாகக் கண்ட அனுபவமுமாகும். இவ்வாசிரியர் சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளைக் கல்வி மந்திரிக்கு எடுத்து விளக்கி நீதி கிடைக்க எம்மால் இயன்றவரை அதி விரைவில் நடவடிக்கை எடுப்போம்.''

இவ்வாறு சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக் கந்தோரில் வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க விசேஷ பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் கூறினர். இக் கூட்டத்திற்குத் தமிழரசு தமிழ்க்காங்கிரஸ்கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பிரசன்னமாகியிருந்தனா.

வட இலங்கை தமிழ் ஆசிரியர்சங்கத்தலைவர் திரு. பொன்னுத்துரை தனது தலைமையுரையில், 'அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்த காலம் முதல் ஆசிரியர் இடமாற்றத்தில் காலத்துக்குக் காலம் நேரத்துக்கு நேரம் ஒவ்வொரு திட்டத்தைக் கையாளுகிறது எனத் தெரிவித்தார்.

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா பேசுகையில் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் ஆசிரியர் சங்கங்களிடையே இடமாற்றத் திட்டம் பற்றி ஒத்த கொள்கையில்லை. 1968-ல் இடமாற்றத் திட்டத்தை அமுல் செய்த முறை ஓரளவுக்குக் கஷ்டம் இல்லாமல் இருந்தது. அதே திட்டத்தைச் சலுகைகளை 1969லும் அமுல் செய்யுமாறு வேண்டுகிறேன் என்ருர்.

சிங்கள ஆசிரியர்களுக்குத் தங்கள் குறையைக் கூற மொழி வசதியாகவுள்ளதெனவும் தமிழர்களுக்கு அவ்வாறு இல்லாததால் தமிழ் தெரிந்த உதவி வித்தியாகர்த்தர் இருக்க வேண்டுமெனப் பருத்தித்துறை எம். பி. கூறினர்.

சாவகச்சேரி எம்.பி. பேசுகையில் 'அரசியல்வாதிகளும் ஆசிரியர்சங்கப் பிரமுகர்களும் கூடி இடமாற்றத்தில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை நிரந்தரக் காரியதரிசிக்கும் கல்விமந்திரிக்கும் எடுத்துக் கூறவேண்டிய அவசியகாலம் வந்துவிட்டது என்ருர்.'

உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் இப் பிரச்னைபற்றி இறுதியாகப் பேசுகையில் ஈவிரக்கமற்ற இடமாற்றத் திட்டத்தினுல் பாதிக்கப்பட்ட பொறுப்புள்ள பெண் ஆசிரியைகள் பலர் தமது கஷ்டங்களைக் கூறி நிரந்தரக் காரியதரிசி முன் கண்ணீர் விட்டனர். அந்தக் கண்ணீரைக் கண்டு கூட நிரந்தரக்காரியதரிசியின் நெஞ்சு இளகவில்லை. சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு உரியவர்களேயல்லர். அப்படியானவர்களுக்கு இடமாற்ற மூலம் கொடுக்கும் கஷ்டங்களைப் போக்க இயன்றது செய்வேன் என்று உறுதி கூறினர்.

## 7 எதிரிகளும் மாவட்ட நீதிமன்றத்துக்கு பாரம்

குரும்பசிட்டி. செவ்வாய்

சங்கானை வாள்வெட்டு வழக்கு விசாரணை பூர்த்தியானதையடுத்து ஏழு எதிரிகளையும் யாழ். மாவட்ட நீதிமன்ற விசாரணைக்கு நிற்

வெட்டிப் படுகாயப்படுத்தி கத்தியால் குத்திக் காயம் விளைவித்தது, சட்டவிரோத கூட்டம் கூடி பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்தது முதலான குற்றச்சாட்டுக்கள்

## தமிழினத்தின் எதிர்காலம் பற்றியமுக்கிய முடிவுகள்

### ஏப்ரல் மகாநாட்டில் எடுக்கப்படும் என்கிருர் செனட்டர் நடராசா

அளவெட்டி, செவ்வாய்

''எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறும் தமிழரசு மகாநாடு இலங்கை வாழ் தமிழினத்தின் எதிர்காலத்தைப் பற்றி பல முக்கிய முடிவுகளை எடுக்கும்'' என தமிழரசுக்கட்சி அளவெட்டிக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து உரையாற்றிய செனட்டர் சு. நடராசாகூறினர்.

காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

செனட்டர் திரு. நடராசா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

எதிர்வரும் சித்திரை மாதம் உடுவிலில் நடைபெற உள்ள தமிழரசுக் கட்சி மகாநாட்டுக்கு கிளைகளின் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளே தீர்மானங்களைக் கொண்டு வந்து பேச முடியும். இருபத்தைந்து அங்கத்தவர்களுக்கு ஒரு பிரதிநிதியும் மற்றைய பத்து பத்து பிரதிநிதிகளுக்கு ஒவ்வொரு பிரதிநிதியுமாக பங்கு கொள்ளலாம். ஆதலால் உங்கள் கிளையிலும் அங்கத்தவர்களைச் சேர்த்து நீங்களும் பிரதிநிதிகளை அனுப்புங்கள் என்று கூறினர்.

இதையடுத்து நடைபெற்றநிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. ம. செல்லையாவும், உபதலைவராக திரு. க. சிவசம்புவும், செயலாளராக திரு. ஸ்ரீமுருகனும் ஏழு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## கல்லூரிசேஷ்டைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

### வடபகுதி சுப்ரின்டன்ட் மகாநாடு கூட்டுவார்

நல்லூர், செவ்.

வடமாகாணத்திலுள்ள கல்லூரி அதிபர்களைஒருமகாநாட்டுக்கு அழைத்துள்ளார் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட்.

பாடசாலைகளுக்குள் நடைபெறும் பலவித சேஷ்டைகளுக்கும்ஒரு முற்றுப் புள்ளி வைக்குமுகமாகவே சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம்இவ்விதமகாநாட்டைக் கூட்டியுள்ளார்.

கல்லூரி அதிபர்களையும் ஆசிரியர்களையும் கேலிசெய்யும் மாணவர் தொகை அதிகரித்துள்ளதாகவும் இவர்களைக் கட்டுப்படுத்துவது பெரும்கஷ்டமான வேலையாக அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட தொடர்பான புகார்கள்குறித்துஆராய்ந்து நல்ல முடிவுசெய்வதற்காகவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவிகளுடன் வீணை சேஷ்டைகள் செய்யும் மாணவர்கள் மீதும் பொலிஸார் தீவிர கண்காணிப்புச் செய்யவிருக்கின்றனர்.

அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தலையிடிகொடுத்து வரும் 'சேஷ்டை' நாடகங்களுக்கு முடிகாணும் மகாநாடு இந்த மாதத்துக்குள் நடைபெறவிருக்கிறது.

மீன்பிடி உபகுழு கூட்டம்

## இனி அரசாங்க அதிபர் தலைமையில்

அளவெட்டி, செவ். ஒன்று பேட்டி கண்டது.

உதவி அரசாங்க அதிபர் தலைமையில் இதுவரை நடைபெற்று வந்த யாழ். உபகுழுவுக்கு தலைமை வகிப் இப்பேட்டியின் பின்பே அரசாங்க அதிபர் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து கிழக்கு ஜெர்மனி ஊடாக மேற்கு பெர்லினுக்குள் மேற்கு ஜெர்மன் சட்டமன்ற உறுப்பினர்கள் துரைமார் கமா கூப் போவதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதற்கு அமெரிக்கா, விஜயம்செய்யவிருக்கிறார்.

இந்த விஜயங்கள் அங்கு தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையை மேலும் குழப்பிவிடக்கூடும் என்று சோவியத் பத்திரிகையான இஸ்வேஸ்தியா கருத்து வெளி

ஒப்பந்த நாடுகளின் சுப்ரீம் கமாண்டர் கிழக்கு ஜெர்மனிக்கு தற்பொழுது விஜயம்செய்திருக்கிறார்.

# ‘அண்ணாவை அடக்கம்செய்துவிட்டு பாராட்டுகிறோமே . . . . .’

## எம். ஜி. ஆர். கவலை

சென்னை பெப் 11

அண்ணாவை வைதது்க் கொண்டு பாராட்டிப் பேச வேண்டிய கூட்டத்தில்அவர் சடலத்தை அடக்கம் செய்துவிட்டு பேசுகிறோம் என்பதை நினைக்கவும் முடியவில்லை என்று சென்னைகடற்கரையில் நடைபெற்ற அண்ணா இரங்கற் கூட்டத்தில் பேசுகையில் நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்கூறினார்.

கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், மதியழகன் ஆகியவர்களும் பேசினார்கள்.

எம். ஜி. ஆர். தொடர்ந்து பேசியதாவது:-

மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செலுத்த கூடிஇருக்கிற இந்த கூட்டத்தில் பல்வேறு கருத்துள்ளவர்களும் தங்களுடைய அஞ்சலியைசெலுத்திக் கொள்வதைப்பார்க்கும் போது என்னைப் போன்றவர்களுக்கு மனதிற்கும் உள்ளத்திற்கும் வேதனையாக இருக்கிறது என்பதைசொல்லித்தான் ஆகவேண்டும்.

அண்ணாவை வைத்துக் கொண்டுபாராட்டிப் பேச வேண்டிய இந்தக் கூட்டத்தில்அவருடைய சடலத்தை அடக்கம் செய்துவிட்டு பேசுகிறோம் என்பதை என்னால் நம்பமுடியவில்லை.

சிறந்த ஜனநாயக வாதியாக அண்ணா விளங்கினார். நல்ல உள்ளம்படைத்தவர்கள் அரசியல்வாதியாக வருவது இயற்கை. ஆனால் அண்ணா கலைஉள்ளம் படைத்தவராகவும், விளங்கினார். அண்ணாகாட்டியஜனநாயகப் பாதையில் தம்பிகளாகிய நாம் பணியாற்றிச் செல்வோம். அண்ணா புறத்தேதான் அகன்றுவிட்டார். அகத்தே நம் உயிர் உள்ளவரை இருப்பார் என்பதை நம்முடைய ஒற்றுமை மூலம் கொள்கை மூலம் காட்டுவோம்.

அவர் பேசும் போதும். துக்கத்தினால் இடையிடையே தொண்டைஅடைத்து பேசமுடியாமல் நின்றார். அவர்கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது.

# ‘பூட்டோ’வுக்கு தடுப்புக்காவல்

## சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார்

கராச்சி, பெப். 11

பாகிஸ்தானின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் சுல்பிகார் அலிபூட்டோ ஜெயிலிலிருந்து விடுவிக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கும்படி உயர்நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டிருக்சிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம்முதல் ஜெயிலில்வைக்கப்பட்டிருக்கிறார் திரு. பூட்டோ அயூப் ஆட்சிக்கு எதிராக கலவரங்களைத் தூண்டிவிட்டதாக திரு. பூட்டோ மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 41 வயதான மக்கள் கட்சியின் தலைவரான திரு. பூட்டோ லாகூர் ஜெயிலிலிருந்து விடுவிக்கப்பட்டு லார்க்காணாவிலுள்ளஅவரதுவீட்டில் தடுப்புக் காவலில் வைக்கப்படுவார்.

## ஏழாலை மகா வித்தியாலயத்துக்கு புதிய கட்டடம்

குடும்பசிட்டி, செவ்.

ஏழாலை மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் இடநெருக்கடியைப் போக்கும் வகையில் உடுவில் எம். பி. திரு. வீ. தருமலிங்கத்தின் முயற்சி காரணமாக கல்வி அமைச்சு ரூபா 15 ஆயிரம் புதிய வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் நிறுவ நிதி உதவி ஒதுக்கியுள்ளது.

## ராட்சத தொலை நோக்கி

லண்டன், பெப். 11

பிரிட்டனில் புதிய தொலைநோக்கி ஒன்று நிர்மாணிக்கப்படவிருக்கிறது. 60 அங்குல விட்டமுடைய தூரதர்ஷனி கண்ணாடியைக்கொண்ட இந்தத் தொலைநோக்கி உலகிலேயே மிகப் பிரமாண்டமானதாக விளங்கும்.

லண்டனிலுள்ள விஞ்ஞான தொழில் நுட்ப இம்பீரியல் கல்லூரி இந்தப் புதிய தொலைநோக்கியை நிறுவும்.

செங்கிரண ஒளியியலை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புதிய தொலைநோக்கி இயங்கும். இதனால் எல்லையற்றதாய் விரிந்துகிடக்கும் பிரபஞ்சத்தையும் அதன் நட்சத்திரமண்டலங்களையும் இந்தத் தோலைநோக்கி மூலம் கணித்தறிவது சாத்தியமாகுமென பிரிட்டிஷ் வானசாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

## இவ்வருட மத்தியில் த. கா. மகாநாடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் வருடாந்த மகாநாடு இவ்வருட நடுப்பகுதியில் நடக்கவிருக்கின்றது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் தனது கட்சிப் பிரமுகர்களுடன் கூடி இதுபற்றி ஆலோசனைகளை நடத்தினார்.

கட்சியின் கவனத்திற்கு இதுவரை கொண்டுவரப்படாத விஷயங்களை வட்டார ரீதியாகவும், கிராம ரீதியாகவும் பரிசீலனைக்கு எடுத்த பின்னரே மகாநாடு பற்றி முடிவு எடுப்பதெனவும் இந்த ஆலோசனைக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (கா. நி.

## “வழிகாட்டியை இழந்துவிட்டது”

உடுப்பிட்டி, செவ்.

‘செந்தமிழ்க் காவலர் அறிஞர் அண்ணா எம்மை விட்டுப்பிரிந்து விட்டார். அண்ணாவின் பிரிவால் தமிழ்நாடு தன் தவப் புதல்வனை இழந்து விட்டது. தமிழுலகு தனது வழிகாட்டியைப் பறி கொடுத்து விட்டது” என்று அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் ஆசிரியர் மாணவர்களால் நடாத்தப்பட்ட அண்ணா அனுதாபக் கூட்டத்திற்கு ஆசிரியர் திரு. ஜே. எஸ். கிறிஸ்ததாஸ் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

கூட்ட ஆரம்பத்தில் அறிஞர் அண்ணாவின் ஆத்மா சாந்திக்காக இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட இக் கூட்டத்தில் திருவாளர்கள் வி. ரி. தணிகாசலம், முருகேசு. ஆ. டே. நைல்ஸ் அகியோரும் பேசினர்.

## இருவருக்கு அபராதம்

குடும்பசிட்டி, செவ்வாய்

ஊரங்குணை, ஊரெழு ஆகிய இடங்களில் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர். ஏ. ஜேக்கப் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி அதிகாலையில் திடீர் வேட்டை நடாத்தி சட்டவிரோத வடிசாராயம் தயாரித்த இருவரைக் கைது செய்தது. ஊரங்குணையில் பொலிஸ் கோஷ்டியைக் கண்டதும் வீட்டிலிருந்து வேலியால் பாய்ந்து ஓட முயன்ற கசிப்பு உற்பத்தியாளரை பொலிஸார் துரத்திப் பிடித்தனர். இவ் வேட்டையின் போது சாராய வடி உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டன.

வடிசாராயம் வைத்திருந்தது, தயாரித்தது உட்பட நான்கு குற்றச் சாட்டுகள் சுமத்தி ஊரங்குணை வாசியான நாகமுத்து கணபதிப்பிள்ளை மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது எதிரிக்கு ரூபா 300 அபராதம் விதிக்கப்பட்டது.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த சின்னக்குட்டி அரியகுட்டி என்பவர் வடிசாரயம் வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டதால் முன்னரும் குற்றப் பட்டவராகையால் எதிரிக்கு மல்லாகம் நீதிபதி ரூபா 400 அபராதம் விதித்தார்.

குடும்பசிட்டி. செவ்வாய்

சங்கானை வாள்வெட்டு வழக்கு விசாரணை பூர்த்தியானதை யடுத்து ஏழு எதிரிகளையும் யாழ். மாவட்ட நீதிமன்ற விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டு வழக்கை மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம், வழக்கை யாழ். மாவட்ட் நீதிமன்றத்திற்குப் பாரப் படுத்தியுள்ளார்.

சங்கானையைச் சேர்ந்த இராசதுரை என்பவருக்கு கடந்தவருடம் பெப்ரவரி மாதம் 1-ம் திகதி பண்டத்தரிப்பில் வைத்து வாளால் வெட்டிப் படுகாயப்படுத்தி கத்தியால் குத்திக் காயம் விளைவித்தது, சட்டவிரோத கூட்டம் கூடி பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்தது முதலான குற்றச்சாட்டுக்கள் சுமத்தி திரு நாவுக்கரசு, திருவாதிரை, ஆறுமுகம், தேவராசா. சுப்பையா, தர்மலிங்கம், சிவபாதசுந்தரம் ஆகிய ஏழு பேருக்குஎதிராக வழக்கு சங்கானைப் பொலிஸாரால் தொடரப்பட்டுள்ளது. எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே.செல்வரத்தினம் ஆஜரானார்.

மார்க்கட் கட்டினாலும்

# கஸ்தூரியார் வீதி மூடப்படமாட்டாது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் கட்டப்பட்டாலும் அதற்கு நடுவிலிருக்கும் கஸ்தூரியார் வீதி ஒருபோதும் மூடப்படாது. ஆஸ்பத்திரி வீதிக்கும், பெரிய கடை வீதிக்கும் இடையில் இருக்கும் இந்த வீதி மூடப்படாது என்ற தகவலை நேற்று நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா தெரிவித்தார்.

மேல்மாடி கொண்ட மார்க்கெட் பழைய பஸ்நிலையத்தில் கட்டப்படும்போது அதன் கீழே 20 அடி அகலமானதாக கஸ்தூரியார் வீதி அமைக்கப் பட்டிருக்குமாம். இதற்கு ஏற்றதாக மார்க்கெட் மாதிரிப்படம் திருத்தி அமைக்கப்படும் எனவும் திரு. எஸ். நாகராஜாநேற்று முன்தினம் சபைக் கூட்டத்தில் தெரிவித்தார். (கா நி)

# சாதிப்பாகுபாட்டை ஒழிக்க தெரிவிக்கப்பட்ட யோசனை

வெள்ளவத்தை செவ்.

“தமிழகத்தில்கையாள்வது போன்று இலங்கையிலும் சாதிப்பாகுபாட்டை ஒழிக்க வேண்டுமானால் கலப்புத் திருமணத்தை நாம் ஆதரிக்கவேண்டும். கலப்புத்திருமணம் செய்பவர்களுக்கு தங்கப்பதக்கம் அளித்துக் கௌரவிக்க வேண்டும். இது மிக்க பயன் தரும்நடவடிக்கையாகும்” என்ற யோசனை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர் மன்றக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின்11 வது ஆண்டு விழாவாக இக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கைப்பல்கலைக் கழகத்தில் இந்துமத போதனா பீடம்நிறுவப்பட வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் புதுவருடத் தலைவராக உபசபாநாயகரான திரு. மு. சிவசிதம்பரம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். துணைத் தலைவர்களாக திருவாளர்கள் பாலசுப்பிரமணியம், செல்வரத்தினம், சந்திரசேகரம், இராசையா ஆகியோரும் பொதுச் செயளாளராக திரு. ச. கு. நித்தியானந்தமும் பிரதி பொதுச் செயளாராக திரு. க. சச்சிதானந்தமும் நிதிச்செயலாளராக திரு. நா. சீவரததினமும்தெரிவு செய்யப்பட்டனர்.

## தமிழ் சுருக்கெழுத்தாளர் நேர்முகப் பரீட்சை

வெள்ளவத்தை, செவ்.

யாழ்ப்பாணம் அரசினர் கனிட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ் சுருக்கெழுத்தாளர் போதனை இனத்திற்கான மாணவர்களைத் தெரிவுசெய்யும் நேர்முகப் பரீட்சை இம்மாதம் 13ந் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

வடக்கின் பல பாகங்களிலுமிருந்து பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

# ... அதிபர் தலைமையில்

அளவெட்டி, செவ்.

உதவி அரசாங்க அதிபர் தலைமையில் இதுவரை நடைபெற்று வந்த யாழ். மாவட்ட மீன்பிடி இணைப்பு உபகுழுக்கூட்டம் இனி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற இருக்கிறது.

உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்று வந்த மீன்பிடி இணைப்புக் குழுக்கூட்டம் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவேண்டுமென அரசாங்க அதிபரை தமிரழசு ஆட்சிமன்ற உறுப்பினர் மூவரைக்கொண்ட குழு ஒன்று பேட்டி கண்டது.

இப்பேட்டியின் பின்பே அரசாங்க அதிபர் இந்த உபகுழுவுக்கு தலைமை வகிப்பார் எனத் தெரிகிறது.

## ‘அரசியலாக அமையக் கூடாது’

பருத்தித்துறை, செவ்.

கரவெட்டி வாணி கலைக் கழகம் தேசீய உயர்கல்விச் சபைத் தலைவருக்குச் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் “தமிழ்வித்துவான்கள், பண்டிதர், புலவர்மாருக்குப் பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிக்கான வசதிகளை ஏற்படுத்தி, அவ்வாராய்ச்சியில் புதுமை, தகுதி, ஆழம் ஆகிய அம்சங்களை உடைய நூல்களை ஏற்று, அவற்றின் ஆசிரியருக்கு ‘கலாநிதி’ப்பட்டம் வழங்குவதே விரும்பத்தக்கதாகும். ‘கலாநிதி’ப் பட்டம் அரசியல் சலுகையாக அமைவது உயர்கல்விக்கும் நாட்டுக்கும் பேரிழுக்காகும்” என்று தெரிவித்துள்ளது.

## எதிரிகளுக்கு அபராதம்

### வாளால் வெட்டினார்களாம்

வல்வெட்டித்துறை செவ்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கணபதி ஆள்வான் ஆள்வான் சின்னாச்சி ஆகிய இருவரும் அதே இடத்தைச் சேர்ந்த முருகன் நடராசா முருகன் சிதேவி ஆகிய இருவருக்கும் வாளால் வெட்டி படுகாயப் படுத்தியதாகவும் சோற்றுப்பானை சட்டிகளை அடித்து சேதப்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளான ஆள்வானையும் சின்னாச்சியையும் குற்றவாளியாக கண்டு தலா ரூபா 150,100 அபராதமும் விதித்துள்ளார்.

## ‘உரிய மதிப்பளிக்க வேண்டும’

பருத்தித்துறை, செவ்.

“ஆசிரியர் திறமையுடனும் திரிகரண சுத்தியுடனும் கடமையாற்றவேண்டின். சமுதாயத்தில் அவர்களுக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும். இங்கிலாந்து போன்ற நாடுகளில் தேசீய விழாக்களில் ஆசிரியர் சங்கத்தலைவர்களுக்கு இடமளிக்கப்படும். சோஷலிச நாடுகளில் அவர்களை அரசாங்கம் கௌரவிப்பதுடன், அவர்களுடன் கலந்தே கல்வித்திட்டங்களை உருவாக்குகிறது. ஆனால் இலங்கையில் ஆசிரியன் அரசாங்கத்தாலும் சமுதாயத்தாலும் ஒதுக்கப்படுகிறான். இந்நிலையில் ஆசிரியர் தமது முழுத் திறமையையும் சமுதாயத்திற்கு அர்ப்பணிக்க முடியாது.

இவ்வாறு கரணவாய் மகா வித்தியாலய ஆசிரியர் திரு. வே. கந்தவனம், தமது முப்பதாண்டு ஆசிரிய சேவையின் பின் ஓய்வு பெறுவதை முன்னிட்டு நடாத்தப்பட்ட பாராட்டு விழாவுக்குத் தலைமை தாங்கிய மேற்படி வித்தியாலய அதிபர் திரு. சீ. தர்மலிங்கம் கூறினார்.

தொடர்ந்து பேசிய திரு. தர்மலிங்கம், ஆசிரியனை ஓர் ஏணிக்கு ஒப்பிட்டு, சமுதாயத்தில் பலரும் உயர்பதவிக்கு ஏறிச்செல்ல ஆசிரியன் வழிவகுத்து, தான் தொடர்ந்து ஒரே நிலையில் நிற்பதாகக் கூறினார்.

## இன்னொரு துறைமுகம் வேண்டும்

அளவெட்டி, செவ்,

தற்சமயம் குருநகரில் இருக்கும் 400க்கு மேற்பட்ட வள்ளங்கள் அந்த துறைமுகத்தில் தங்க முடியாது இருக்கிறது, ஆதலால் தற்சமயம் இருக்கும் துறைமுகத்துக்கு தெற்கே ஒருதுறைமுகம் அமைக்க வேண்டுமென்று கோரும் மகஜரொன்றை திரு ஜே. ஏ. செல்வநாயகம் இம்மாத இறுதியில கொழும்பில நடைபெறவிருக்கும் மீன்பிடி ஆலோசனை சபைக்கூட்டத்தில் சமர்ப்பித்துள்ளார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ம ணி வா க் கு

நமது நாட்டின்வளர்ச்சி கிராமத்தில்தான் தங்கியிருக்கிறது. கிராமத்தவர்களின் நிலையை உயர்த்துவதற்கு உண்மையான உழைப்பு தேவை அப்போதுதான் நாடு முன்னேறியதாகக் கருதமுடியும்.

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம் 30-ந் திகதி
(12 - 2 - 69)


## நெடுஞ்செழியன் மறுப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதியின்மந்திரிசபையில் சேருவதற்கு திரு. நெடுஞ்செழியன் மறுத்துவிட்டது பெரிதும் வருந்தத்தக்கதாகும்.

அமரர் அண்ணாவுக்குப் பிறகு தற்காலிக தலைவராக இருந்த திரு. நெடுஞ்செழியன் முதல் அமைச்சராகவர எல்லாத் தகுதிகளும் பெற்றவர்தான், ஆனால் ஜனநாயக தர்மப்படி பெரும்பாலோரின் கருத்தே ஏற்கப்படவேண்டுமென்பது முறை. தி. மு.க,வின்சட்டசபைக்கட்சியினர் திரு. கருணாநிதியை சரியாகவோ தவருகவோ தேர்ந்தெடுத்து விட்டனர்.

அந்தத் தீர்ப்பு எவ்வளவு கசப்பாக இருப்பினும் அதை ஏற்று தமது ஒத்துழைப்பை புதிய தலைவருக்கு பூரணமாக அளிக்க வேண்டியதே, திரு. நெடுஞ்செழியனின் ஜனநாயகக்கடமை. ஆனுல் அவர் எந்தக் காரணங்களால் புதிய அமைச்சரவையில் சேர மறுத்திருப்பினும் அவர் இவ்விதமனப்பான்மையால் கட்சிக்கோ தமிழகத்துக்கோ நன்மை செய்தவராக மாட்டார்.

அமரர் அண்ணாவின் மறைவு தி. மு, க. கட்சிக்கும், தமிழக ஆட்சிக்கும் பேரிடியாகும். இவ்வித நிலையில்தான் கட்சிக்குள் கட்டுப்பாடும் ஒற்றுமையும் அதிகம் இருக்கவேண்டும். திரு. நெடுஞ்செழியனின் இந்தஒத்துழையா மனப்பான்மை கட்சிக்கோ ஆட்சிக்கோ எப்படி நன்மை செய்யும் இதற்கு மாருக கட்சிக்குள்பிளவு ஏற்படவும் ஆட்சியே குலைந்து விடவும் கூடிய ஆபத்துஏற்படுமென்றே அஞ்சப்படுகின்றது.

தனது சொந்த விருப்பு வெறுப்புகளை ஒதுக்கிவைத்து மக்கள் பணி செய்ய எவ்வளவு சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதை ஏற்று கூடிய அளவு சேவைசெய்ய திரு. நெடுஞ்செழியன் முன்வந்திருப்பின், அவரது மதிப்பு

தி. மு. க. வின் புதியதலைவராக திரு, கருணாநிதி தெரிவு செய்யப்பட்டு விட்டது பற்றி நமது கொழும்பு சக வர்த்தமானியான 'டெயிலி நியூஸ்' பெரிதும் கலவரமடைந்து தமிழ் காங்கிரசுக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் ஏதேதோ எச்சரிக்கைகளையும் உபதேசங்களையும் செய்யப் புறப்பட்டுள்ளது. தேசியத்தோடு வகுப்பு வாதத்தைக் கலந்து விடக்கூடாதென்றும் தமிழக மக்கள் இந்தியாவுக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென்றும், தமிழ்நாடு புதியமுதல் அமைச்சரின் தீவிர வகுப்பு வாதமும் பிளவு மனப்பான்மையும் ஜனநாயக இந்தியாவுக்கு பெரிய ஆபத்தைஏற்படுத்துமென்றும் 'டெயிலி நியூஸ்' பயமுறுத்துகிறது. தமிழ்நாடு அரசியலில் இவ்வளவு கவலை காட்ட அப்பத்திரிகை முன்வந்தது வரவேற்கத் தக்கதே. ஆனுல் தங்களுக்கு எது நன்மை என்பதை தீர்மானித்துக் கொள்ள தமிழ் மக்களுக்கும் தி.மு,க. கழகத்தினருக்கும் நிச்சயம் தெரியும்.

ஏதும் தவறு செய்யினும் அவர்கள் தங்களைத் திருத்திக்கொண்டுவிடலாம். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமுன், திரு.அண்ணாதுரை திராவிட நாட்டைப் பிரிக்க வேண்டுமென்றும் தீவிரமாகக் கேட்டுவந்தார். நிர்வாகப் பொறுப்பு வந்ததும் அவரே பெரிதும் மனம் மாறிவிட்டார். அவரது கொள்கையைப் பூரணமாக அங்கீகரித்து அவற்றையே பின்பற்றப்போவதாகக் கூறும் புதிய முதல்வர் திரு. கருணாநிதி, அண்ணாவின் கொள்கைக்கு மாருக தீவிர வகுப்புவாதியாகவோ, பிரிவினையாளராகவோ இருப்பாரென்று அஞ்சத் தேவையில்லை. அவருக்கும் ஆட்சிப் பொறுப்பு வந்துவிட்டதால் அவரது தீவிரத் தன்மையும் குறைந்து அதிக நிதானம் ஏற்படக்கூடும்.

பத்து வருடங்களுக்கு முன்

## இதற்குத்தான் போகிருர்களாம்

தம்புள்ளை, செவ்வாய்

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் எண்ணற்ற யாத்திரீகர்கள் சென்று வணங்குவதுமான தம்புளைப் பாறைக் கோயில் வளவு இப்பொழுது காதலர்களின் பொழுதுபோக்குக்கிடமாகக் காட்சியளிக்கிறதென தெரிவிக்கப்பட்டுள்ளது. எண்ணற்ற இளம் ஜோடிகள் அக்கோவிலுக்குச் சென்று நாளின் பெரும் பகுதியைக் கழிக்கிருர்கள் எனவும் கோயில் ஆராதனைகளுக்குப் போவதில்லையெனத் தம்புள்ளைப் பொலிஸ் அறிவித்துள்ளது. இவர்கள் தங்களுடைய கேளிக்கைகளுக்கு இக்கோவிலைப் பயன்படுத்துகிருர்களென விகாரையின் நாயக்கதேரோ புகார் செய்துள்ளார். இக்கோவிலுக்கு அண்மையில் சென்ற இளம் பெண்களையும், இளைஞர்களையும் அவர்களின் நடவடிக்கைகளைக் கவனித்த அப்பகுதி மக்கள் கூச்சலிட்டு நையாண்டி செய்தனராம்.

## கலைஞருக்குக் கிடைத்த இடம்

வெள்ளவத்தை, செவ்.

கலைஞர்களுக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம் என்று ஒரு காலத்திலே கேட்டார்கள். ஆனுல் இன்று எமது அண்டை நாடான தமிழகத்தில் கலைஞர்கள் அரசியலில் முக்கிய பங்கெடுத்து நாட்டை வழிநடத்திச் செல்வதைக் காண்கையில் எம் உள்ளம் பூரிக்கின்றது. தமிழக முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. மு. கருணாநிதி ஒரு கலைஞர்.

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் புதிய தமிழக முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதியைப் பாராட்டிப் பேசிய திரு. எம். தாமரைச்செல்வன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், கலைஞர்களுக்கும் பொதுமக்களுடன் ஊடாடி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வளமாக ஆளத் தெரியும் என்பதை தமிழகத்தில் தி. மு. கழகம் நிரூபித்துவிட்டது. சாதாரண உழைப்பாளியும் இடையருத ஊக்கத்திஞல் பெரிய பதவிகளுக்கு வரலாம் என்பதை அவர்கள் நிரூபித்துவிட்டார்கள். இது உலகக் கலைஞர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்ருர்.

திருவாளர்கள் கே. கனக

# மலர்ந்திடு ஈழநாடே!

பிறந்தநன் நாட்டின் நாமம்
 பீடுறச் சென்னி தாங்கி
நிறைந்தநல்'ஈழநாடே'
 நித்திய கரனே! வாழி!
பிறந்தது பத்தே யாண்டு
 பெரும்பணி தன்னை நோக்கிச்
சிறந்துநற் பலவே யாண்டு
திகழ்ந்துநீ வாழி! வாழி!

மறைந்தநற் பெரியோர் தம்மின்
 மாண்பினை நினைவிற் காட்டித்
திறந்தனைத் திகழச் செய்யும்
 தேசியச் சிறப்பு ஏடே!
பிறந்தநற் காலந் தொட்டே
 பெரும்பணி யாற்றி வந்த
சிறந்தநின் சேவை தன்னைச்
 சிந்திப்போம் தமிழர் நாமே!

சதிகாரக் கூட்டந் தன்னைச்
 சந்தயிற் காட்டி வைப்பாய்
நிதிகோடும் லஞ்சப் பேய்கள்
 நிலைத்திடா தழியச் செய்வாய்
விதி மீறும் பதுக்கல் கொள்ளை
 வீழ்ந்திட விளக்கம் செய்வாய்
மதிமேவும் பெரியோர் வாக்கு
மலர்ந்திடு ஈழ நாடே!

கதிரவ னுதிக்கு முன்னே
 கரங்களிற் றிகழு வாயே!
மதிமிகு விளக்கம் தாங்கி
 மலர்ந்தெமை மகிழ்விப் பாயே!
துதிபெறும் கோயிற் தொண்டு
 தோத்திரம் தூயோர் நோக்குப்
பதிவுறும் பான்மை கொண்டோய்
 பல்லாண்டு வாழி! வாழி.

ஆசிரியத் தலையங்கம் அறிவை யாக்க
 ஐயாறன் அஞ்ஞான இருளைப்போக்க
மாசுதனை வழிப்போக்கன் மருவிக் காட்ட
 மணிவாக்கு மலர்வுமிகு மதியையூட்ட
தேசுடனே திக்கெலாம் விஜயம் செய்யும்
 தினசரியே சேவைமிகு ஈழநாடே!
நேசமொடு யாழ்தனிலே தமிழர் பெற்ற
 நிறைகுடமே நீடூழி வாழி! வாழி!

அரியாலையூர் வே. ஐயாத்துரை.

## ஈழநாடு வாழ்

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

(பல்லவி)

ஈழநாடு வாழ்கவே இலங்கைநாடு வாழ்கவே!

(அனுபல்லவி)

சோழநாடு சேரநாடு தொடரநின்ற வைகைநாடு
சேரநின்று நீலவானில் திங்களென்ன அழகுசெய்து (ஈழ)

[சரணம்]

மாங்கனியின் வடிவமாகி தேங்கதலி கமுகு தெங்கு
பூங்குயில்கள் ஆடும்சோலை புண்ணிய நதிகள் சூழ
ஆங்கிலமும் செந்தமிழும் அன்னையீன்ற சிங்களமும்
பாங்கில் நின்று ஓலமிட பாதநடமாடி நின்று (ஈழ)

புத்தநெறி சைவநெறி போற்றுமிஸ்லாம் அன்புநெறி
சர்த்தர் நெறி ஒன்றுகூடி கலந்துமிக்கு வாழு நாடு
எத்திசையும் போற்ற நின்றஎறிகடல் இலங்க முத்தம்
தத்துகின்ற சுவர்ணபூமி தலைநிமிர்ந்து கொடியிலங்க (ஈழ)

-கரம்பன் சோதி

## 'மேலைநாடுகளில் சைவம்வளர விவேகானந்தர் போல் உழைக்குக'

'பிடிக்கப்படும்'

## மீன்கள் வைத்திய பரிசோதனைக்குள்ளாகும்

யாழ்ப்பாணம், புதன்

பொலிஸாராலும், கடற்ருெழில் இலாகாவினராலும் கைப்பற்றப்படும் மீன்கள் ஆஸ்பத்திரி சட்ட வைத்திய டாக்டரால்இனிச்சோதனைப் படுத்தப்பட விருக்கின்றன. இந்தஅதிர்ஷ்டம்இறந்தபின்னரே மீன்களுக்குக் கிடைக்கும்.

வடபகுதி பொலிஸாரும், கடற்ருெழில் இலாகா ஊழியர்களும் மீன்களுக்கான வைத்திய சோதனையை இன்றுமுதல் ஆரம்பிக்கின்ருர்கள். டைனமெட் மூலம் மீன்பிடிப்பதை முற்ருக ஒழிக்கவே இந்தப் புதிய முறை கையாளப்படுகின்றது.

கைப்பற்றப்படும் மீன்கள் வைத்திய சோதனையின்பின் டைனமெட்வெடி மூலம் பிடித்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால், மீனை வைத்திருந்தவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமாம்.

வீடுகளில்டைனமெட்வெடிகளை வைத்திருப்பவர்களும் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள். இதற்கானஉதவியை பொதுமக்களிடமிருந்து பொலிசார் வேண்டியுள்ளனர்.

(கா. நி.)

# 'நமது கலையை நாமே மதிப்பதில்லையே!

## வெளியீட்டு விழாவில் கவலை

சித்தங்கேணி, செவ்.

''நமது நாட்டின் கலை இலக்கியங்களை நம்மவரே நசிவுபடுத்துகின்றனர் என்பதை இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'நிர்மலா'வுக்குக் கிடைத்த வரவேற்பிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்'' இவ்வாறு திரு. டொமினிக்ஜீவா குறிப்பிட்டார்.

தமிழ்ப்பட நடிகரும் டைரக்டருமான திரு. ரகுநாதன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'அரவிந்தம்' வெளியீட்டுவிழாவில் உரைநிகழ்த்திய திரு. ஜீவா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''இற்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்தின் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் யாழ்ப்பாணத்துப் புகழையும் கொண்டு சென்றவர்கள்தான் இன்று இந்தியக் கலைஞர்கள் வரிசையில் இடம்பெற்ற கிட்டப்பா, கே. பி. சுந்தராம்பாள், கோவிந்ததாஸ் போன்ருேர். இலங்கைக் கவிஞர்கள் வெளிநாடுகளில் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்திருக்கிருர்கள். மதுரையில் நடைபெற்ற பாரதிவிழாவிலே பாரதியைப் புகழந்துபாட ஓர் இலங்கையர்தான்-நாவலர்தான் தேவைப்பட்டார். ஆனுல் அந்தநாவலர் அனைத்துலகதமிழாராய்ச்சிமாநாட்டிலே பெயர்கூட உச்சரிக்

நமது கலைகளும் வளர இடமுண்டு.

கவர்ச்சி இல்லை என்பதற்காக பத்திரிகைகளை வாங்காது விடக்கூடாதென்றும், கவர்ச்சி உண்டாகும் வண்ணம் ஆதரவு கொடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

திருவாளர்கள் வி. தர்மலிங்கம் எம். பி., கே. டானியல். அ. கந்தசாமி,புதுமைலோலன், எஸ். யூ. சோமசேகரம் ஆகியோரும் பேசிஞர்கள். கலைநிகழ்ச்சிகளும் நடந்தன.

## பாராட்டு

குடும்பசிட்டி. செவ்.

மல்லாகம் கோவிற்பற்று திடீர் மரணவிசாரணை அதிகாரியாக திரு. இ. பாலசுப்பிரமணியத்தை நியமித்ததை முன்னிட்டு இம்மாதம் 17-ம் திகதி தேநீர் விருந்துபசாரம் நடைபெறவிருக்கின்றது.

## வடபகுதி...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கட்டாய பாடமாக இருக்கிறது. ஆதலால் நாங்கள் ஆங்கிலத்தைக்கைவிடக் கூடாது. ஆங்கிலம் அவசியம் தேவை. ஆங்கிலத்தை ஒருபாடமாக எடுத்த பட்டதாரிகள் சிங்களப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் நியமனம் பெற முயற்சி எடுத்து வருகிருேம். உத்தியோகம் பெற வேண்டுமென்பவர்கள் சிங்களம் படிக்கத்தான்.

## ஐயாறன் எழுதுவது

நேற்று 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு விழாவை, 'ஈழநாடு' ஊழியர் விழா வென்றேசெல்லவேண்டும். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு மகிழ்ச்சி, உற்சாகம், பெருமை!

காரியாலயமெல்லாம் தோரணம் கட்டி, அழகு படுத்துவதில் இரவு பகல் ஈடுபட்டனர். சிரமத்தைச் சிறிதும் பார்க்கவில்லை. தங்கள் வீட்டுக் கல்யாணம் போல் எண்ணிக் காரியம் செய்தார்கள்.

யாழ்ப்பாணத்து முனிவர் யோகர் சுவாமிகளிடம் 'ஈழநாடு' முதல் பிரதியை வைத்து வணங்கிய போது, அவரது திருவாக்கால் ஆசி கூறிஞர்கள். ஆகவே முதலில் அவரது உருவப்படத்துக்கு மலர் மாலையிட்டு வணங்கிஞேம்.

அடுத்தபடி, ஈழநாடு கட்டடத்தை ஒவ்வொரு கல்லாக வைத்து எழுப்பி, அல்லும் பகலும் அதன் வளர்ச்சிக்கே உழைத்து உழைத்து உயிரும் கொடுத்த அமரர் டாக்டர் க. தி. சண்முகரத்தினம் அவர்களின் உருவப்படத்துக்கு மாலையிட்டு மரியாதை செலுத்திஞேம். அவர் இல்லாதது பெரிய குறை. அவர் மட்டும் இருந்திருந்தால், இவ்விழா இன்னும் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்.

'ஈழநாடு' காரியாலய ஊழியரெல்லாருக்கும் அவர் செய்த நன்மைகள் கொஞ்சமா? நன்றி உள்ளங்கள் அவற்றை எப்படி மறக்கும்? அவர் படத்துக்கு மாலையிடும்போது பலர் கண்களில் நீர் பனித்தது. அவரை நாங்கள் காணமுடியாவிடினும், அவர் தோன்ருத்துணையாக நின்று இவ்விழாவையெல்லாம் கண்டு மகிழ்வாரென்பதில் ஐயமில்லை.

0 0 0

வைரவர் கோயில், சிவன் கோயில் இவற்றிலே விசேஷ பூசை வழிபாடுகள்நடந்தன. காரியாலயத்திலே அச்சுக் கோர்க்கும் இடத்திலுள்ள இலக்கணசுவாமிகள் எனும் ஸ்ரீமுத்துகுமாரசுவாமிஅவர்களின் உருவப்படத்துக்கும் பூசை செய்தோம், இதே குடும்பத்தில் பிறந்து 14வருடம் வளர்ந்து, பின்னர் தமிழகம் சென்று தாமே துறவு பூண்டு தமிழுக்கும் சைவத்துக்கும் சிதம்பரத்திலிருந்து அரும்தொண்டுசெய்து, தவவாழ்வு வாழ்ந்து இங்கு திரும்பாமலே மறைந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பணி செய்ய எவ்வளவு சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதை ஏற்று கூடிய அளவு சேவைசெய்ய திரு. நெடுஞ்செழியன் முன்வந்திருப்பின், அவரது மதிப்பு இன்று பெருமளவு உயர்ந்துள்ளதுடன் கட்சிக்குள் இருக்கும் அவரது எதிர்ப்பாளரின் மனமும் மாறி எதிரிகளும் நண்பர்களாகி இருப்பர்.

இப்போதும் காலம்கடந்துவிடவில்லை. இவையெல்லாம் நன்கு யோசித்து அறிவாளியான திரு. நெடுஞ்செழியன் மனம்மாறலாம். அதற்குப் போதிய அவகாசத்தையும் புதிய முதல்வர் அளித்திருக்கின்றார். துரதிருஷ்ட வசமாக அவர் தொடர்ந்து பிடிவாதமாக இருப்பினும் அவர் கட்சிக்கோ ஆட்சிக்கோ மாறாக எதுவும் செய்வாரென்று அஞ்சத் தேவையில்லை. அமைச்சரவையில் சேராவிடினும் கட்சிக்குள் இருந்துகொண்டே தேவைப்பட்ட ஆலோசனைகளைக் கூறி பணிசெய்ய எவ்வளவோ இடமுண்டு.

...யில்லை. அவருக்கும் ஆட்சிப் பொறுப்பு வந்துவிட்டதால் அவரது தீவிரத் தன்மையும் குறைந்து அதிக நிதானம் ஏற்படக்கூடும்.

பத்து வருடங்களுக்கு முன் இலங்கையிலே தமிழருக்கு மாறாக வகுப்புவாதப் புயல் அடித்தபோது, செல்வாக்கு மிக்க 'டெயிலி நியூஸ்' பத்திரிகை அதற்கு மாறாக ஒரு வார்த்தையும் எழுதவில்லை. தமிழையும் ஒரு தேசிய மொழியாகச் சட்டபூர்வமாக அங்கீகரித்த பின், திடீரென அதைப் புறக்கணித்து சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றுவது நியாயமல்லவென்றும், பெருவாரி மக்களின் வகுப்புவாதம் உண்மைத் தேதியமாகாதென்றும் அது எச்சரிக்கவில்லை. அப்போதே அப்பத்திரிகை தனது இந்தத் தேசியக் கடமையைச் செய்திருப்பின், இலங்கை மேலான ஜனநாயகப் பாதையில் எவ்வளவோ முன்னேறியிருக்கும். இப்போதும்கூட இங்கு தமிழ்பேசும் மக்களுக்குள்ள அநீதிகளைக் கண்டித்து அப்பத்திரிகை ஒரு வார்த்தையும் சொல்ல ஏன் முன்வருவதில்லை?

# மகாதேவ பாலம்பற்றி பிரெஞ்சு நிபுணர் ஆராய்ச்சி

## பிரதமர் பண்டிதருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், புதன்

'பூநகரி மகாதேவா பாலம் மூடுவதால் உப்பளம் அமைக்கும் திட்டம் பாதிக்குமா என்பது பற்றி பிரெஞ்சு நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இந்தநிபுணர்களின் அறிக்கை கிடைத்த பின்னரே பூநகரி மகாதேவா பாலம்அமைப்பதுபற்றிஆராயப்படும்'

இவ்வாறான கடிதமொன்றை பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மகாதேவாபாலத்தை மூடுவதற்கான நடவடிக்கையை மேற் கொள்ளும்படி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதமரிடம் கடிதமூலம் கேட்டிருந்ததற்கு பிரதமர் பதில் கடிதம் அனுப்பினார்.

இதுபற்றி தபால் தந்தி போக்குவரத்து அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரம கிளிநொச்சி எம். பிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோடைகாலத்தில் ஆரம்பமாகியுள்ள பிராஞ்சு நிபுணர்களின் ஆராய்ச்சி மாரிகாலம்வரை நடைபெறுமென்றும், பாலம் போடுவதால் உப்பளம்பாதிக்கும் என்பதுபற்றி அவர்கள் ஆராய்ச்சிசெய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பாலத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பூநகரி மக்கள் கிளிநொச்சி எம்பியை சந்தித்து தங்கள் கஷ்டங்கள் பற்றி எடுதத்துக்கூறினர். இப்பாலம் அமைப்பதுபற்றிபலதடவைகளில் தாம் அரசினருடன் தொடர்பு கொண்டுள்ளதாக தம்மைச் சந்தித்த பொதுமக்களிடம் கூறிய திரு. கா. பொ. இரததினம் தமது ஆதரவுமட்டும் இதற்குப் போதாதென்றும் சகல தமிழ் எம். பிக்களும் இது விடயததில் அக்கறை காட்டவேண்டும் என்றும் கூறினார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 12-ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

பதவிகளுக்கு வரலாம் என்பதை அவர்கள் நிரூபித்துவிட்டார்கள். இது உலகக் கலைஞர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்றார்.

திருவாளர்கள் கே. கனகராம், ஏ. பெரியசாமி ஆகியோரும் பேசினர்.

## சேவைக்கு பாராட்டு

அளவெட்டி, திங்கள்

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலையில் டாக்டராகக் கடமையாற்றி இடமாற்றமாகிச் செல்லும் என். சிவசுப்பிரமணியத்துக்கு சேவை நலம் பாராட்டு விழா ஒன்று இம்மாதம் 9-ம் திகதி மாலை சிரிமலை நகுலேஜ்வரா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

டாக்டர் திரு. பூ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற உள்ள இச்சேவை நலம் பாராட்டு விழா தெல்லிப்பளைக் கருகம்பானை மக்களின் சார்பில் அளிக்கப்படவுள்ளது.

உடுவில் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம், தெல்லிப்பளை கிராமசபைத்தலைவர் எம். சிதம்பரநாதன், வலிவடக்கு காரியாதிகாரி பி. எஸ். பற்றிக்ஸ் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவர்.

0 0

குரும்பசிட்டி, செவ்வாய்

ஏழாலை கிராமசபைத் தலைவர் திரு. க. சிவகுருவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்ததை யடுத்து அவரின் சேவை நலம் பாராட்டி அண்மையில் நெசவுநிலையத்திற்கு அருகாமையில் திரு. எஸ். சின்னத்தம்பி தலைமையில் பாராட்டுவிழா ஒன்று நடாத்தப்பட்டது. இவ் விழாவில் மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி, திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. இ. பாலசுப்பிரமணியம், திரு. சி. ஆறுமுகம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்

## சிவராத்திரி

பேராதனை, செவ்வாய்

பேராதனைப் பல்கலைக் கழக முருகன்கோயிலில் சிவராத்திரி அனுஷ்டிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. 15-ம் தேதி இரவு நான்குயாமங்களிலும் சுவாமிக்குச் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

இவ்விழா டாக்டர் கே. சி. துரைராசா உபயமாக நிகழ்கிறது.

-கரம்பன் சோதி

# 'மேலைநாடுகளில் சைவம்வளர விவேகானந்தர் போல் உழைக்குக' தமிழ்நாடெங்கும் திருவாசகமணிக்கு மணிவிழா

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியத்திற்கு தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் மணிவிழாக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவையொட்டி சிதம்பரம்-குன்றக்குடி, மதுரை, சென்னை ஆகிய பல இடங்களில் கூட்டங்கள் நடைபெற்றன. அவரது ஜன்ம நட்சத்திரமாகிய கார்த்திகைத் திருவாதிரை நாளான கடந்த டிசம்பர் 7ம் திகதி சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமான் முன்னிலையில் 61-வது பிறந்த நாள் விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை திருவாசகமணிக்கு ஆயிரங்கால் மண்டபத்தில் ஸ்ரீ சுவர்ண வெங்கடேச தீக்ஷிதர் தலைமையில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் திருவாசகமணிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். இக்கூட்டத்தில் பொது த்க்ஷிதர்கள் சார்பில் திருவாசகமணிக்கு வாழ்த்துப்பத்திரம் ஒன்றும் வாசித்தளிக்கப்பட்டது. பி. ஆர். சுவாமிநாதன், பேராசிரியர்கள் சோமசுந்தரம் பிள்ளை, வெள்ளை வாரணனார் முதலியோர் திருவாசகமணியைப் பாராட்டிப் பேசினர்.

டிசம்பர் 9ம் திகதி குன்றக்குடி மடத்தில் திருவாசகமணியின் மணிவிழா தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் ஆதரவிலும் தலைமையிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முற்பகலில் மடத்தில் வைதீகச் சடங்குகள் விமரிசையாக நடைபெற்றன. பிற்பகல் பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாது அடிகளார் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் சேதுபதி இராமநாதபுரம் அரசர், குன்றக்குடி அடிகளார், முன்னாள் கலெக்டர் ஜி. எம். முத்துச்சாமிப்பிள்ளை, முன்னாள் கமிஷனர் திரு. கீ. இராமலிங்கனார், சட்ட மன்ற உறுப்பினர் திரு. மெய்யப்பன்-அறநிலைய ஆணையாளர், துணை ஆணையாளர் உட்படப் பலர் திருவாசகமணியைப் பாராட்டி வாழ்த்தினர். இவர்கள் வாழ்த்திய பின்னர் திருவாவடுதுறை, தருமபுர ஆதீனத்களின் தம்பிரான்களும் குன்றக்குடி அடிகளார் சார்பாக அறநிலைய ஆணையாளர் திருவாசகமணிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். வாழ்த்துப் பத்திரங்களும் வாசித்தளிக்கப்பட்டன.

நன்றி தெரிவித்துப் பேசிய திருவாசகமணி எப்படியும் இந்த ஆண்டிலாவது தமது உலகச் சுற்றுப் பயணத்தை முடிக்கவேண்டுமென நம்பிக்கை தெரிவித்து அதற்கு சேதுபதியாரும், குன்றக்குடி அடிகளாரும் உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் தனிப்பட்ட ஒரு தமிழறிஞருக்கு முதன் முதலாகக் கொண்டாடப்படும் விழாவாக டிசம்பர் 31ம் திகதி மாலை திருவாசகமணியின் மணிவிழாவைக் கொண்டாடியது. கூட்டத்துக்குத் தலைமைவகித்த சங்கத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராஜன் திருவாசகமணியின் அருந் தொண்டுகளைப் பாராட்டிப் பேசித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன் திருவாசகமணியினால் வெளியிடப்பெற்றுள்ள 'திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ்' என்ற பிரபந்தத்தை வெளியீடு செய்துவைத்துப் பாராட்டினார். இந்நூலின் பல சிறப்புகளையும், திருவாசகமணியின் சமய, இலக்கியத் தொண்டுகளையும்பாராட்டிப் போற்றி திருவாளர்கள் பி. அரங்கசாமிநாயுடி, வக்கீல்கள் அகமது சுல்தான், அவ்வை சு. துரைசாமிப்பிள்ளை, பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இக் கூட்டத்திவ் திருச்சி தமிழ் சங்க சார்பாகச் செயலாளர் திரு. ச. பெரியசாமி திருவாசக மணிக்குப் பொன்னாடை போர்த்தினார்.

மதுரையில் நடைபெற்ற திருவாசகமணி மணிவிழாக் கூட்டத்திற்குப் பின்னர் சென்னையில் 3 நாட்கள் நடைபெற்ற கூட்டங்களில் திருவாசகமணி பாராட்டப்பட்டார். டிசம்பர் 27 தொடக்கம் 3 நாட்கள் மயிலாப்பூர் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 63லது ஆண்டு விழாவிற்கும் திருவாசகமணி தலைமை வகித்தார். சைவசமாஜம், நடத்திய திருவாசகமணி மணிவிழா வரவேற்பு நிகழ்ச்சியில் திருவாசக மணியைப் பாராட்டி தவத்திரு குன்றக்குடி அடிகளார் உயர்மன்ற நீதிபதி திரு. ஆர் சதாசிவம், பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் முதலியவர்கள் உரை நிகழ்த்தினர். இப் பாராட்டு விழாவில் சமாஜத்தின் சார்பில் திருவாசகமணிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதோடு பாராட்டுப் பத்திரமும் படித்தளிக்கப்பட்டது. இதன் பின்னர் கோவை மருதமலைமீது நடைபெற்ற திருப்படி விழாவிலும் சிரவணம் பட்டிக் கௌமார மடத்தின் முன்னாள் சந்நிதானத்தின் குருபூஜை தினத்தன்றும் திருவாசக மணியின் மணிவிழா கொண்டாடப்பட்டது. மருதமலைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய திருவாசகமணியை பேரூர் சத்வித்தியா சங்கத் தலைவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார். இக் கூட்டத்திலும் திருவாசகமணியைப் பாராட்டிக் கோவை சப்ஜட்ஜ் தவத்திரு சுந்தரம் ஆகியோர் பேசினர். சிரவணம்பட்டிக் கௌமார மடத்தில் நடைபெற்ற குருபூசையின்போது தவத்திரு சுந்தரம் அடிகளால் திருவாசகமணி பாலசுப்பிரமணியத்தின் மணிவிழாப் பாராட்டாக பொன்னாடை போர்த்தப்பட்டது, இக்கூட்டத்திலும் திருவாசகமணியின் சைவத் தொண்டினைப் பாராட்டிப் பலர் பேசினர், திருவாவடு துறையில் நடைபெற்ற 16வது திருமந்திர மகாநாட்டில் திருவாசகமணி உரையாற்றினார். இந்த மகாநாட்டிலும் இவரின் 61வது பிறந்த நாளையொட்டி அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் பொன்னாடை போர்த்தி ''விவேகானந்தரைப் போல் மேல் நாடுகளில் சைவ சித்தாந்தத்தை வெற்றியுடன் பரப்பிவர ஆசீர்வதிக்கிறோம்'' என வாழ்த்தினார்.

பாரதியைப் புகழ்ந்துபாட ஓர் இலங்கையர்தான்-நாவலர்தான் தேவைப்பட்டார். ஆனால் அந்தநாவலர் அனைத்துலகதமிழாராய்ச்சிமாநாட்டிலே பெயர்கூட உச்சரிக்கப்பட முடியாதஅளவுக்குப் போய்விட்டார்.''

அடுத்து நாவலாசிரியர் இளங்கீரன் பேசியதாவது:-

ஈழத்திலே நல்ல எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதை வெளிநாட்டாருக்குக் காட்டவேண்டும். ஈழத்து எழுத்தாளர்கள் சகலரும் கூட்டாகச்சேர்ந்து இலக்கிய நூல்களை ஏராளமாக வெளியிடவேண்டும். இதனால்

...தாரிகள் சிங்களப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் நியமனம் பெற முயற்சி எடுத்து வருகிறோம். உத்தியோகம் பெற வேண்டுமென்பவர்கள் சிங்களம் படிக்கத்தான். இதனை தற்பொழுது எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை. 6 மாதத்திற்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெற தமிழ் பட்டதாரிகளுக்கு வேலைவழங்கும்படி, கல்வி மந்திரியைக் கேட்டேன். அவர் தட்டிக் கழித்துவிட்டார்.

இரியகொல்லையின் தற்போதையதிட்டம் வடபகுதியில் வருடந்தோறும் 108 பட்டதாரி ஆசிரியர்களைக் குறைத்துக்கொண்டு வருவதுடன் பட்டதாரிகள் போதிக்கும் வகுப்புகளையும் நேரத்தையும் கூட கல்வி மந்திரிவட பகுதியில் குறைத்துக் கொண்டு வருகிறார். இந்த நிலை நீடித்தால் வருங்காலத்தில் தமிழரின் நிலை இருள் சூழ்ந்ததாகத்தான் இருக்கும்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா இராசலட்சுமி

உடும்பிராயைச் சேர்ந்த காலம் சென்ற மலாயன் பென்சனர் கா. சுப்பையாவினதும் நேசம்மாவினதும் புதல்வியும், விஜயசிங்கம் (ஆசிரியர் சிங்கப்பூர்), பரமசிவம் (ஆசிரியர் மலேசியா), பரமேஸ்வரி, சிவநேசன் (ஈழநாடு), காசிநாதன் ஆகியோரின் சகோதரியும், இரத்தினவேல் (சுகாதார இலாகா யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியுமாகிய இராசலட்சுமி காலமாகிவிட்டார். தகனக்கிரியை இன்று காலை 11 மணியளவில் நடைபெறும்.

567 சு. சிவநேசன்

## தசாகம்

கீலக ஞு தை மீ 22 உ (4-2-69) செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்த எங்கள் அன்பு தந்தை பிரம்மஸ்ரீ ச. நாகமுத்துஐயர் அவர்களின் தசாகம் 13-2-69 வியாழக்கிழமை பகல் 12-00 மணிக்கும் சபிண்டி கரணம் 15-2-69 சனிக்கிழமையும் கிரகயக்ஞம் 17-2-69 திங்கட்கிழமையன்றும் காரைநகர் மணற்காடு அவரது இல்லத்தில் நடைபெறும். இன பந்துக்களை கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம் நா. கணேசசர்மா (சென்னை, இந்தியா), நா. ஹரிஹரசர்மா, நா. சோமசர்மா (கிள்ளான் மலேசியா), நா. ஞானசம்பந்தசர்மா, சு. சண்முகதாசசர்மா மருமகன்).

526

...முகம் சென்று தாமே துறவு பூண்டு தமிழுக்கும் சைவத்துக்கும் சிதம்பரத்திலிருந்து அரும்தொண்டுசெய்து, தவ வாழ்வு வாழ்ந்து இங்கு திரும்பாமலே மறைந்தவர் அப்பெரியார். அவரது உருவப்படம் எங்கள் அச்சகப் பகுதியில் இருப்பது மிகப் பொருத்தமென்கிறார் அதிபர். ஏன் தெரியுமா? அச்சுப் பிழைகள் அதிகம் வராமல் அவர் பார்த்துக்கொள்வாரென்றார்.

'ஈழநாடு' ஸ்தாபகரான திரு க. சி. தங்கராசாவைப் பற்றி இங்கு ஏதும் எழுதினால் அவருக்குப் பிடிக்காது. அதனால் அவரைப் பற்றி எழுத என் பேனா தயங்குகிறது. ஆனால் என் நண்பர் சிவநாயகம் அவர்கள், 'தினபதி' பத்திரிகையில் கே. ஸி. டி, யைப் பற்றிபிரமாதமாக எழுதினார். அப்பேர்ப்பட்ட ஒரு பெரியாரின் அரவணைப்பில் நடந்துவரும் 'ஈழநாடு' பத்திரிகையில் தொண்டுசெய்வது ஒரு பாக்கியமென்றே 'ஊழியர்' ஒவ்வொருவரும் கருதுகின்றனர்.

'ஈழநாடு' பணியில் பல பெண்மணிகளும் ஈடுபட்டுள்ளனர். விவாகமாகாத பெண்கள், ஈழநாட்டில் சேர்ந்து பணியாற்றினால், ஒரு வருடத்துக்குள் அவர்களுக்கு விவாகமாகிவிடுவதைப் பார்க்கிறோம்! பத்தாவது ஆண்டுவிழாவிலே சாதிமத வேற்றுமையின்றி எல்லா ஊழியரும் கலந்து கொண்டு ஒற்றுமையான ஒரு குடும்பம் போல் கொண்டாடினர் இறை அருளும் குருவருளும், அன்பர்களின் ஆதரவும் பெருகி இனிதே 'ஈழநாட்டின்' தொண்டு பன்மடங்கு மேலாக ஓங்குமென்பதே இந்தவிழாமூலம் எனக்கேற்பட் நம்பிக்கையாகும்.

வழிபாடு முதலிய வற்றில் ஒருபுறம் கலந்துகொண்டாலும் காரியாலய வேலைகள் தயங்காமல் நடந்து இன்று 'ஈழநாடு' வழக்கம் போல் வெளிவருகிறது. மக்கள் பணியே உண்மையில் தெய்வப்பணியாகுமல்லவா? இந்த ஊழியர்களின் உற்சாகமான உழைப்பின் மூலமே தெய்வம் இரங்கி அருள் புரிகிறதென்பதைஉணர்ந்து அவர்களை வணங்குகின்றேன்.

நம் கடம்பனைப்
பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்
கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும்
தாங்குதல்
என்கடன் பணிசெய்து
கிடப்பதே
— அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org